பக்கங்கள் 8 ★

# ஈழநாடு The EELANAADU

50 சதம்

மலர் 22 மாசி 8 ரபி-ஆகி 3 இதழ் 10
யாழ்ப்பாணம் புதன்கிழமை 20-2-80

FECEIVED 1980 -2-20 PERIODICALS DIVISION UNIVERSITY LIBRARY CAMPUS

# கிரகணம் பார்த்து 130 பேர் பாதிப்பு!

[சென்னை]

சூரியகிரகணத்தைநேரடியாகப் பார்வையிட்ட 130 பேர் சென்னையிலுள்ள அரசினர் கண் ஆஸ்பத்திரியில் அனுமதிக்சப்பட்டுள்ளனர். நேற்று மட்டும் 51பேர் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் எட்டுப்பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும், இவர்களது பார்வை மங்கலாக ... என்றும் வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

SRI LANKA RECEIVED 1980 -2-20 PERIODICALS DIVISION LIBRARY CAMPUS

★ வேலைபெற்றுத் தருவதாககூறி ஏமாற்றினராம்!

# தொழிற்சங்கப் பிரமுகர்மீது மோசடிக் குற்றச்சாட்டு

## அமைச்சருக்கு யாழ். இளைஞர்கள் மகஜர்

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய போக்குவரத்துச்சபையைச் சேர்ந்த ஊழியரும், முக்கிய தொழிற்சங்கவாதியுமான ஒருவர்; யாழ், மாவட்டத்தைச்சேர்ந்த பல இளைஞர்களிடம் பலஆயிரம்ரூபா மோசடிசெய்துள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. சாலைப்பரிசோதகர்கள், பஸ்சாரதிகள், காப்பாளர்கள்போன்ற பல நியமனங்களைப் பெற்றுத்தருவதாகக் கூறி, ஏமாற்றி, யாழ்.மாவட்டத்தைச்சேர்ந்த ஏராளமான இளைஞர்களிடமிருந்து 'சுளை சுளையாக' பணத்தை வசூலித்ததாகஇவர் மீது குற்றம்சுமத்தப்பட்டு, இதுசம்பந்தமாக உடனடியாக விசாரணை நடத்துமாறு போக்குவரத்து அமைச்சரிடம் மகஜர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது!

இது குறித்து பாதிக்கப்பட்ட இளைஞர்கள். யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனிடமும் முறையிட்டுள்ளனர்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சாலை ஒன்றில் கடமையாற்றுபவர் என்று கூறப்படும் மேற்படி நபர், தொழிற்சங்கமொன்றின் முக்கிய பிரமுகர் என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக பாதிக்கப்பட்ட இளைஞர்கள் போக்குவரத்து அமைச்சர் ஜனப் எம், எச். மொஹமட்டுக்கு அனுப்பியுள்ள மகஜரில்; வட

(8ம் பக்கம் பார்க்க)

---

பொன்விழா கிரிக்கெட்

### இங்கிலாந்து வெற்றி

(பம்பாய்)

இங்குநடைபெற்ற வரலாற்றுப்புகழ் பெற்ற பொன் விழா கிரிக்கெட் போட்டியில்

(8-ம் பக்கம் பார்க்க)

---

வட்டு. லயன்ஸ் பொருட்காட்சி:

## காட்சிச்சாலைகள் சம்பந்தமாக கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

இலங்கை கைத்தொழில்அபிவிருத்திச்சபையின் அனுசரணையுடன் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியில் அடுத்தமாதம் நடத்தவிருக்கும் தொழில்நுட்பம் காண் செயற்பாட்டு பொருட்காட்சி சம்பந்தமான ஆலோசனைக் கூட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று, இறுதி ஆலோசனைக்கூட்டமும், கலந்துரையாடலும் கடந்த வாரம் நடைபெற்றது.

(8-ம் பக்கம் பார்க்க)

---

## நாகேஷ், ஜெய், அசோகன் யாழ்ப்பாணம் வருகிறார்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழகதிரைப்பட நடிகர்கள் நாகேஷ், ஜெய்சங்கர், அசோகன் ஆகியோர் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்கின்றனர்.

வெள்ளிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் துரையப்பா ஸ்ரேடியத்தில் நடைபெறும் ''கலையமுதம்' புதுஷமக்கதம்ப நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நடிகர்கள் குழுவினர் ரசிகர்களுக்கு சிறப்பு விருந்தளிப்பார்கள்.

வெள்ளிக்கிழமை பிற்பகல் காங்கேசன்துறையிலும் இக்கலைஞர்கள் ஒருபொதுநிகழ்ச்சி

(8-ம் பக்கம் பார்க்க)

---

## பொலிஸ்விசாரணை அறிக்கை

### நேற்று சமர்ப்பிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இந்திரராசா கொலை தொடர்பான பொலிஸ் விசாரணை அறிக்கை.நேற்று யாழ். மேலதிக நீதவான் திரு. கே. எஸ், மகேசன் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டது.

கடந்த தவணையின்போது

(8-ம் பக்கம் பார்க்க)

---

''இந்திரராசாவிடமிருந்து

## சுழல் துப்பாக்கியை சார்ஜன் கைப்பற்றினர்'' சப்இன்ஸ்பெக்டர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''இந்திரராசாவிடமிருந்து எனது முன்னிலையில் சார்ஜன் கந்தசாமி ஒரு சுழல் துப்பாக்கியை கைப்பற்றினர். இன்ஸ்பெக்டர் கருணாரத்தின ஜெயேந்திரவிடம் ஒரு சுழல் துப்பாக்கியை கைப்பற்றினர். கோட்டில் சமர்ப்பிக்கப்பட்ட இரு துப்பாக்கிகளும் அவர்களிடம் கைப்பற்றியவைகளாகும்.''

இந்திராராசாகொலைதொடர்பாக நடந்த விசாரணையின் போது சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் வீரதுங்கா மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு யாழ். மேலதிக நீதவான் கே. எஸ். மகேசன் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

சப்-இன்ஸ்பெக்டர் வீரதுங்கா மேலும் கூறியதாவது நான் சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக கடமையாற்றிவருகின்றேன். 13-7-79-ல் இன்ஸ்பெக்டர் கருணாரத்ன சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றினர். அன்று நான் உதவி இன்ஸ்பெக்டராக கடமையாற்றினேன்.

''அன்றையதினம் நானும் இன்ஸ்பெக்டர் கருணரத்தினவும் ஜெயேந்திரனையும் கைது செய்தோம். அவரை மட்டுமல்ல இந்திரராசாவையும் அன்று கைதுசெய்தோம். எனது முன்னிலையில் இன்ஸ்பெக்டர் கருணாரத்தின ஜெயேந்திரனை கைதுசெய்தார். அவரிடமிருந்து சுழல் துப்பாக்கி ஒன்றையும் கைப்பற்றினர். சுழல்துப்பாக்கிக்குப்பாவிக்கும் 2குண்டுகளையும் கைப்பற்றினர். சுழல் துப்பாக்கிகளையும் 2 பாவிக்கப்பட்ட குண்டுகளையும் கைப்பற்றினர்.

''பொலிஸ் சார்ஜன் கந்த

(8-ம் பக்கம் பார்க்க)

மிளகாய் செடியைப் பாதிக்கும் பூச்சிபுழுக்களை அறவே அழிக்க...

கல்கிசன்ஸ் ரேகுரே 40%

பாவியுங்கள்.......

மற்றும் உங்கள் பயிர்களைத்தாக்கும் சகல கிருமிகளையும் அழித்தொழிக்க...

பரத்தியன் E50% - புறடான் 3%GR

பங்கசு கொல்லிகளான

எலோசால் 80%W.P. - குப்றெக்ஸ்

ஆகியன அமோக விளைச்சலைத்தருகின்றன-

● மருந்துகள் வாங்கும்போது தரத்தின் அடையாளமான கல்கிசன்ஸ் வியாபாரச் சின்னத்தை கவனித்து வாங்குங்கள்

தொலைபேசி: 7711 - தந்தி: ஸ்ரீராம்

இறக்குமதியாளரும்-விநியோகஸ்தரும்

கல்கிசன்ஸ்

147, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

உள்ளூர் பட்டி மாடுகள் விற்பனைக்குண்டு. சி. வேலுப்பிள்ளை, பறையகாடு. D. 5, பரந்தன். 4993

எங்களிடம் நல்ல நிலையுள்ளதும் அதிக காலம் பாவனையில்லாமலுமுள்ள ராக்டரும் பெட்டியும், கலப்பையும் விற்பனைக்குண்டு, தேவைப்படுவோர் நேரிலோ அல்லது கடிதமூலமோ தொடர்புகொள்ளவும். Tractor No. 36 ஸ்ரீ 2448, Trailer 44 ஸ்ரீ 8056 தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம் ஏ. எஸ். ஆறுமுகம் அன் சன்ஸ், பிரதானவீதி, ஊர்காவற்றுறை. 4969

கல்வியங்காடு விளையாட்டு அரங்கு வீதியில், வீதி ஓரமாக 9½ பரப்பு தோட்டக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:- பொ. சி. அன்னலிங்கம், புலவனூர் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 4987

**இ. சிவசுப்பிரமணியம்**
சட்டத்தரணி & நொத்தாரிஸ்
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்:

## அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

மரண சாதனமின்றி மரணித்த யாழ்ப்பாணம் இல. 77, கச்சேரி நல்லூர் ரோட்டு, இராமலிங்கம் சபாரத்தினம் தர்மரத்தினத்தின் ஆதனங்களும் பெறுமதிகளும் சம்பந்தப்பட்ட விடயத்தில்

தர்மரத்தினம் கைம்பெண் மதிவதனி. இல. 77, கச்சேரி - நல்லூர் ரோட்டு, யாழ்ப்பாணம்.

மனுதார்

இல. தத்துவம்-3504

எதிர்

தர்மரத்தினம் சூரிய குமார், இல. 77, கச்சேரி - நல்லூர் ரோட்டு, யாழ்ப்பாணம்.

எதிர்வாதி

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிர்ணயிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு மாசி மாதம் 29 ம் நாளன்று முற்பகல் 10-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்பட்டலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி
ஒப்பம்
**பொ. பாக்கியநாதன்**
பதிவாளர்
5007

## விற்பனைக்கு

சுந்தை, பஸ் நிலையம், வயல் அருகாமையில் மூன்று பரப்புக் காணியும கல்வீடும் விற்பனைக்குண்டு. எஸ். அருமைநாயகம், பிரசாத் வீதி, நவாலி, மானிப்பாய். 5008

உடுவில் மகளிர் கல்லூரியிலிருந்து 500 யார் தொலைவில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வீடுகட்டவோ, தோட்டம் செய்யவோ ஏற்ற இடம். பகுதியாகவும் விற்கப்படும். தொடர்பு:- 68, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 5009

மிருசுவிலில் 30 பரப்பு தோட்டக்காணி உடனடியாக விற்பனைக்குண்டு, விலை ரூபா 50,000/- (கிட்டியவிலை) விண்ணப்பிக்கவும், விளம்பர இல. 4992 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 4992

## பின்னுறுதிக் கட்டளை

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வீமன்காமத்தைச் சேர்ந்த கந்தையா பராசக்தி என்பவரின் மரணசாதனமற்ற சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்.

செல்லப்பா கந்தையா வீமன்காமம், தெல்லிப்பழை மனுதார்

மரணச்சொத்து) இல: 46
நியாயாதிக்கம் )

எதிராக

கந்தையா சிறிதரன் வீமன்காமம் தெல்லிப்பழை. எதிர்வாதி

மேற்படி விஷயம் 1979-ம் ஆண்டு ஆவணி மாதம் 10-ந் திகதி மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி அவர்கள் முன்னிலையில் மனுதாரின் சட்டத்தரணி திரு. அ. குமரகுரு அவர்கள் சமூகத்துடன் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு மனுதாரின் 10-8-79-ந் திகதியிடப்பட்ட மனுவும், 10-8-79ல் திகதியிடப்பட்ட சத்தியக்கூற்றும் வாசிக்கப்பட்டு நீதிமன்றமானது மனுவில் உள்ள விஷயங்கள் முதற்றோற்றத்திலேயே நிரூபிக்கப்பட்டுள்ளன என்று திருப்தி அடைந்ததென மேல் பின்வருமாறு கட்டளையிடப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1980-ம் ஆண்டு மாசி மாதம் 29-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் போதிய காரணம் காட்டினாலன்றி,

மேற்சொல்லப்பட்ட காலஞ்சென்றவரின் கணவன் என்ற வகையில் மேற்சொல்லப்பட்ட காலஞ்சென்றவரின் மரணசாதனமற்ற மரணச் சொத்தின் நிர்வாகத் தத்துவப் பத்திரங்கள் பெறவுரித்துடையவர் என பிரகடனப் படுத்த வேண்டும் என்றும், அவ்வாறான நிர்வாகத் தத்துவப் பத்திரங்கள் மனுதாருக்கு வழங்கப்படவேண்டும் என்றும் இத்தால் கட்டளையிடப்படுகின்றது.

1979-ம் ஆண்டு ஆவணி மாதம் 10-ந் திகதி.

(ஒப்பம்)
எஸ். ஆனந்தக்குமாரசாமி,
மாவட்ட நீதிபதி,
மல்லாகம்.
4978

## தேவை

அச்சகத்தில் வேலை பழக ஆர்வமுள்ள இளைஞர்கள் தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் சமூகமளிக்கவும். திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். தேவி அச்சகம், நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 5001

## விற்பனைக்கு

தர்மபுரம் சுண்டிக்குளம் சந்திக்கு கிட்ட தோட்டக்காணி 10 ஏக்கர் விற்பனைக்கு இருக்கிறது. நேரில் வரவும் ஆ. ஐயம்பிள்ளை, நீலிப்பந்தனை, காரைநகர். 5006

## தமிழக பிரமுகரின் கதாப்பிரசங்கம்

(மாத்தளை)

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமக மகோற்சவத்தையொட்டி தமிழகம் தஞ்சாவூர் கலைமாமணி ஸ்ரீமதி ரா. கமலாமூர்த்தியின் சங்கீத கதாப்பிரசங்கம் கடந்த 12-ம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

தினமும் இரவு நடைபெறும் இந்நிகழ்ச்சி அடுத்த மாதம் 3-ம் திகதிவரை நடைபெறவுள்ளது.

# “தேசிய ரீதியில் போராடினால் தமிழர் உரிமை பெறலாம்”

## தியாகிகள் விழாவில் சண்முகதாசன்

(நெல்லியடி)

“சாதி அடக்குமுறையால் ஒடுக்கப்பட்ட மக்களும், தமிழ் பேசும் மக்களும் தேசிய ரீதியிலான போராட்டங்களில் கலந்து கொள்வதன் மூலமே தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.”

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. என் சண்முகதாசன், கரவெட்டி கன்பொல்லையில் நடைபெற்ற, “சாதி ஒடுக்கு முறைக்கு எதிராக போராடிய தியாகிகளின் சிலைகள் திறப்பு விழா”வில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. கே. சிவபாதம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் மேலும் அவர் பேசுகையில் கூறுயதாவது:

பாராளுமன்றத்திற்கு தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் செல்வதன்மூலம் அவர்களது உரிமைகள் வென்றெடுக்கப்படும் என எண்ணினால் அது மாபெருந் தவறாகும்.

“சமாதான ரீதியாகவோ, அகிம்சை முறையினாலோ அடக்குமுறைக்குட்பட்ட மக்கள் தமது உரிமைகளை நிலைநாட்ட முடியாது. போராட்டங்கள் மூலமே இவ்வாறான மக்கள் தங்கள் உரிமையை வென்றெடுக்க முடியும் என கம்யூனிஸ்ட் கட்சி 1948-ம் ஆண்டிலிருந்து கூறிவருகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க மரக்கறிகளை விலை பேசுவதுபோல பேரம் பேசுகின்றார். “தென்னிலங்கை இடதுசாரிகள் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக போராட முன்வந்தால் இந்த முதலாளித்துவ அரசாங்கங்களுக்கு எதிராக போராடத் தயார்”, என அவர் பேசுகின்றார். இப்பேரம் பேசிப் பேசி காலம் தாழ்த்தவே தமிழர் விடுதலைக் கூட்டணி விரும்புகின்றது. பேரம் பேசக்கூடிய நிலையில் தமிழ் மக்கள் இன்றிருக்கவில்லை. இருக்கக்கூடாது. விலைவாசி உயர்வுகள் விஷம் போல நாளொரு வண்ணம் வளர்ந்து செல்கின்றது. மக்களின் ஜனநாயக உரிமைகள் திட்டமிடப்பட்டு பறிக்கப்படுகின்றது. இந்த நிலையில் பேரம்பேசுவதை நிறுத்தி தேசிய ரீதியில் நடைபெறும் போராட்டங்களில் கலந்து கொண்டு, தமிழ் மக்களும் குறிப்பாக சாதி ஒடுக்கு முறைக்குட்பட்ட மக்களும் தமது உரிமைகளை வென்றெடுக்கவேண்டும்.

மற்றும் திருவாளர்கள் கே. ராசரட்ணம், டானியல், அன்ரனி, கிருஷ்ணபிள்ளை ஆகியோரும் உரையாற்றினார்கள். (கு)

# ‘சகலருக்கும் பொதுவான பல்கலைக்கழகத்தாலேயே ஆராய்ச்சியில் இறங்கமுடியும்’’

(யாழ்ப்பாணம்)

“பல்கலைக்கழகங்கள் பல நமது நாட்டிலே இருந்தபோதிலும் இவை ஆராய்ச்சித்துறையில் ஆற்றும் சேவை போதாது, சகல மக்களுக்கும் பொதுவான பல்கலைக்கழகம் ஒன்றுதான் முழுமையாக ஆராார்ச்சியில் இறங்க மூடியும். அறிவை வளர்க்க முடியும்; 1969 இல் ஜி. ஜி. பொன்னம்பலம் இக் கருத்தையே வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணத்தில் திருவள்ளுவர் கல்விக்கழகத் தொடக்க விழாவில் பேசும்போது. வட மாநிலக் கல்வி அதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் இவ்வாறு குறிப்பிட்டார்.

லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் தமது உரையிலே. “பல்கலைக்கழகங்கள் எல்லாம் பல்கலைக்கழகங்கள் அல்ல. அவை பட்டங்களை ஆக்குகின்ற தொழிற்சாலைகள். இவை அறிவை வளர்த்தல் வேண்டும். அறிவு விரிந்து செல்கின்ற இக்காலத்திலே இங்கே தாபிக்கப்படும் இக்கல்விக் கழகம் அறிவுத்துறையில் தக்க பணி ஆற்றும் என நம்புகிறேன்’’ என்றார்.

யாழ் மாநகர முதல்வர் திரு. இராஜ விஸ்வநாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு ஆசியுரையாற்றுகையில் “திருக்குறள் கற்பவர்கள் அறிவு வளம் பெறுகிறார்கள். திருக்குறள் மனிதனை முழுமை பெறச் செய்கின்றது. இத்தகைய அரிய நூலிற்கு, இங்கே நிறுவப்படும் கல்விக் கழகம் ஓர் ஆராய்ச்சி நிலையமாக அமையும் என்பதனை அறிய மகிழ்ச்சியடைகிறேன். திருக்குலள் பதிப்புக்களைச் சேகரித்தும், கருத்தரங்குகள், மகாநாடுகள் என்பன நடத்தியும் ஆக்கபூர்வமான காரியங்கள் செய்வதற்கு மக்கள் ஒத்துழைப்பு நல்குதல்வேண்டும்’’ என்றார்.

திருவள்ளுவர் கல்விக்கழக இயக்குநர் திரு. தி. விசுவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் எழுத்தாளர் நாவேந்தன் டாக்டர் சு. வி, இராசரத்தினம். வி. ரி. இளங்கோவன் உட்பட பலர் உரையாற்றினார்கள். (கு)

## பயிற்சி

(உடுப்பிட்டி)

கோப்பாய், உடுப்பிட்டி, பருத்தித்துறை ஆகிய கல்வி வட்டாரங்களைச் சேர்ந்த சங்கீத ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பு அண்மையில் அச்சுவேலி தமிழ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. (கு)

## முத்திரை வெளியீட்டுக்குப் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

சுவாமி ஞானப்பிரகாசருக்கு முத்திரை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்து தமிழ் மக்களின் நீண்ட நாளைய ஆவலைப்பூர்த்தி செய்ய முன்வந்த பிராந்திய அபிவிருத்தி அமைச்சருக்கும ஜனாதிபதிக்கும் நன்றிச் செய்தியொன்றினையும் பாராட்டையும், மல்லாகம் சுவாமி ஞானப்பிரகாசர் இளைஞர் மன்றம் அனுப்பி வைத்துள்ளது.

முத்திரை வெளியீட்டை சுவாமிகள் பிறந்த தினமாகிய ஆகஸ்ட் 30 ம் திகதி நடாத்துமாறும் அதனை யாழ்ப்பாணத்திலேயே செய்ய வேண்டுமாறும் அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (நா)

## பால் சேகரிப்பு நிலையம்

(மன்னார்)

மன்னாரில் பால்சேகரிக்கும் நிலையம் ஒன்றை அமைக்க கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் அனுமதி வழங்கியுள்ளார்.

அண்மையில் கிராமிய கைத்தொழில் அமைச்சர் மன்னாருக்கு விஜயம் செய்திருந்தபோது, பால் சேகரிப்பு நிலையம் ஒன்றை அமைத்துத் தருமாறு மூதூர் எம். பி. யும், மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். ஈ. எச். மஹ்ரூப் வேண்டுகோள்விடுத்திருந்தார். அதற்கிணங்கவே அமைச்சர் தொண்டமான் அனுமதி வழங்கியுள்ளார். (கு)

## மட்டுநகரில் ஜெமினியைக் காண ரசிகர்கள் மோதல்

(மட்டக்களப்பு)

தென்னிந்திய நடிகர் ஜெமினி கணேசன் கடந்த வாரம் காரைதீவிலுள்ள தனது நண்பர் ஒருவரைச் சந்திக்க தனிப்பட்ட முறையில் வந்திருந்தார். தனது நண்பருடன் கல்முனை கடை வீதியில் சென்று பொருட்களை வாங்கும்போது கடை வாசலில் கூடிய ரசிகர்களின் ஆவல் அவர் நின்ற கடையே சிறிது சேதமடையுமளவிற்கு அதிகரித்தது.

பின்னர் ஜெமினி கணேசன் ஒரு வர்த்தக நிறுவனத்தின் மேல் மாடியில் நின்று ரசிகர்கட்கு வணக்கம் தெரிவித்துக் கொண்டார். (கு)

## கத்தோலிக்க குருமார் கருத்தரங்கு

(உடுப்பிட்டி)

யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க குருவானவர்களுக்கான கருத்தரங்கு இம் மாதம் 27ம் திகதி பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் ஆரம்பமாகவுள்ளதாக யாழ். மேற்றிராசனம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 29ம் திகதி வரை நடைபெறும் இக் கருத்தரங்கிற்கு யாழ். ஆயர். அதி. வந். பி. தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமை வகிக்கின்றார். (கு)

## புதிய நிர்வாகிகள்

(மாவிட்டபுரம்)

மாங்கொல்லை இளைஞர் முன்னேற்ற மன்ற சன சமூக நிலைய புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினர்:

தலைவர்: ச. கணபதிப்பிள்ளை, செயலாளர்: ச. ம. தவராசா, பொருளாளர்: செ. சிவகுருநாதன், உபதலைவர்: கி. தாமோதரம்பிள்ளை, உப செயலாளர்: ந. நாகராஜா, 10 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## தேவை

“ஈழநாடு’’ அச்சகத்தில் பணிபுரிவதற்கு நாட் சம்பள அடிப்படையில் தற்காலிக அச்சு இயந்திர இயக்குநர் தேவை. கல்வி, தொழிற் தகைமை, வயது, அனுபவம், முதலிய விபரங்களுடன்

**24-2-80-ம் திகதிக்குமுன் விண்ணப்பிக்கவும்**

பொதுமுகாமையாளர்;
ஈழநாடு லிமிட்டெட். த.பெ. இல 49.
யாழ்ப்பாணம்.
4996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

எத்தனை மனிதர்களோ அத்தனை சமயங்களுமுண்டு என்பது உண்மையே. எனினும் சமயத்தின் மூலத்துக்குப் போய் ஒருவர் பார்க்கும் உண்மையில் எல்லாச் சமயங்களுமொரு சமயமாய்க் காணப்படும்.

— மகாத்மாகாந்தி

## மக்கள் கருத்து

### சுருட்டுத் தொழிலாளர்களும் உற்பத்தியாளர்களும்

வீழ்ச்சி அடைந்துவரும் சுருட்டுத் தொழிலைப் பாதுகாக்க, சுருட்டு உற்பத்தியாளர்கள் சிலர் சேர்ந்து சங்கம் அமைத்து 1000 சுருட்டுக்கு 40 ரூபா கூலி கொடுப்பதாகத் தீர்மானம் நிறைவேற்றியதாகச் சென்ற 14-2-80 'ஈழநாடு' பத்திரிகையில் செய்தி வெளியிட்டிருந்ததைக் கண்ணுற்றேன். அச்செய்தியைப் படிக்கும்போது 'வெள்ளாடு நனையுதென்று, வேங்கை விழுந்து அழுத கதைதான்' ஞாபகம் வருகிறது!

தொழிற் சங்கத்தால் தொழிலாளர்கள் சுரண்டப்படுகிறார்கள் என்றும் போலிச்சங்கத்தை வைத்து தொழிலாளரைச் சுரண்டிப் பணம் சேர்க்கிறார்கள் என்றும் அழுகிறார்கள் இந்த உற்பத்தியாளர்கள். இந்தக் கவலை தொழிலாளர்களுக்கு இருக்கவேண்டுமே தவிர, உற்பத்தியாளர்களுக்கு அல்லவே. இதுவரைகாலமும் தொழிலாளர்கள் வாழ்க்கைத் தர உயர்வால் பாதிக்கப்பட்டபோது, எந்த முதலாளிகளும் தாங்களாகவே கூலியை உயர்த்திக் கொடுத்ததாகச் சரித்திரமே இல்லை. தொழிற் சங்க மூலமாகப் போராடியதனால்தான் கூலி உயர்வு கிடைத்தது. அரும்பாடுபட்டு, இன்னல்களுக்குள்ளாகி, பல தியாகங்களை-தழும்புகளைத் தன்னகத்தே தாங்கிக்கொண்டவர்களைத் தொழிலாளவர்க்கம் மறப்பதற்கில்லை. அத்தகைய தியாகத்தில் பெற்ற கூலி உயர்வை, அரசாங்கத்தால் உறுதி செய்யப்பட்ட பின்னர் கூட, சரிவரக் கூலியைக் கொடுக்காமல் குறைத்துக் கொடுத்து தொழிலாளரை ஏமாற்றியவர்கள் இந்த முதலாளிகள்தான் சுருட்டுத் தொழிலாளராகிய நாம் பல வழிகளிலும் சுரண்டப்பட்டோம் இவர்களால், இழிநிலைப்பட்டு இன்னலுக்குள்ளாகி இருக்கும் இந்நிலையில்தான் நாம் 1000 சுருட்டுக்கு 50 ரூபா கூலி உயர்வுக்குப் போராடி வெற்றி பெற்றோம் தொழிற்சங்கங்கள் மூலமாக. சரியான கூலியைப் பெற்ற எமக்கு, அதனைக் குறைத்துக் கொடுக்கவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றிச் செயலில் இறங்கும் இவர்கள் தொழிலாளர்கள் சுரண்டப்படுகிறார்கள் என்று வேறு நீலிக்கண்ணீர்வடிக்கிறார்கள். என்னே இவர்களின் பெருந்தன்மை?

தொழிற் சங்கங்கள் தீர்மானித்த கூலி உயர்வைக்காட்டிலும் 50 சதம் கூடுதலாகக் கொடுத்த பெருந்தன்மை உள்ள முதலாளிகளும் இருக்கிறார்கள் என்பதையும் கூறத்தான்வேண்டும்.

வேலையின்மையால், வாழ்க்கைத்தர உயர்வால், ஊதிய வெட்டால் இன்னும் பற்பல பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருக்கும் எமக்கு ஒன்றிணைந்த தொழிற்சங்கப் போராட்டத்தின்மூலம்தான் விடிவு ஏற்படுமேதவிர, முதலாளிகளின் சங்கத்தினால் அல்ல என்பதே முழு உண்மை.

கே. ஐ. நாகராஜன்

ஓ டிடம் வீதி,
யாழ்ப்பாணம்.

அமெரிக்க - ரஷ்ய இழுபறி

# அணிசேரா இயக்கத்திற்கு இன்று சோதனை!

சிலன் கதிர்காமர்

உதவி:

மு. திருநாவுக்கரசு

### அணிசேராநாடுகள் எந்த அணியில்?

மனிதனை வாழவைக்கும் உணவுற்பத்தியை அதிகரிப்பதற்குப் பதிலாக மனிதனை அழிக்கவல்ல ஆயுத உற்பத்தியே இன்று அதிகரித்து வருகின்றது. சோவியத் ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையிலான பகைமையும் போட்டியும் மேலும்,மேலும் அதிகரித்து வருகின்றது.

இவ் வல்லரசுகளுக்கிடையில் ஏற்படும் இழுபறியானது அணிசேரா இயக்கத்தை ஓர் சங்கடநிலைக்குத் தள்ளுகின்றது. 1979-80 ஆம் ஆண்டுகளில் உலகரங்கில் ஏற்பட்டுள்ள அரசியற் சூழ்நிலையானது அணிசேரா இயக்கத்தின் தலைவிதியை நிர்ணயிப்பதில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகக் காணப்படுகின்றது. ஈரான் தொடர்பாக அமெரிக்காவின் நிலைமை ஆப்கானிஸ்தான் தொடர்பாக சோவியத்தின் நிலைமை-ஆகிய இரண்டு அம்சங்களும் அணிசேரா இயக்கத்தை பரிசோதனைக்களத்துள் தோய்த்தெடுக்கும் சம்பவங்களாகக் காணப்படுகின்றன. பொதுவில் 79-80 ஆம் ஆண்டுக் காலம் அணிசேரா இயக்கத்திற்கு ஒரு சோதனைக் காலமாகும்.

ஏகாதிபத்திய ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடைந்த நாடுகள் உலகசமாதானத்தை நிலைநாட்டுவதற்கு ஒரு முக்கிய சக்தியாக அமையலாமென நேரு, நாஸர், டிட்டோ போன்ற தலைவர்கள் கருதி, அணிசேரா இயக்கத்தை ஆரம்பித்தனர்.

அணிசேரா நாடுகளின் இயக்கத்தில் அங்கம் வகிக்கும் பெருமளவு நாடுகள் ஏதோ ஒருவகையில் அந்நிய ஏகாதிபத்தியத்திற்குட்பட்டிருந்து விடுதலை அடைந்தவைகளாகும். எனவே ஏகாதிபத்திய எதிர்ப்பு, விடுதலை இயக்கங்களை ஆதரித்தல் என்பன அணிசேரா இயக்கத்தின் அடிப்படைப்பண்பாக அமைந்திருந்தது. அணிசேரா நாடுகளின் தாரக மந்திரம் எந்தவொரு வல்லரசணியுடனும் இராணுவக் கூட்டுச் சேர்வதில்லை என்பதுதான். இவ்வல்லரசு நாடுகளுடன் அணிசேராதிருப்பதன்மூலம் உலக சமாதானத்தை ஏற்படுத்தக்கூடிய நடுநிலையான சக்தியாக அமையலாமென இவ்வியக்கம் கருதியது.

### அணிசேராநாடுகளும் சோவியத்தும்

அணிசேரா இயக்கத்தை ஆரம்பித்த தலைவர்கள் ஏகாதிபத்தியத்தை வன்மையாகக் கண்டித்தார்கள். அதேவேளையில் இத்தலைவர்கள் ஆரம்பகாலத்தில் சோவியத்துடன் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்திக் கொண்டார்கள். 1950,60 களில் உலகில் வல்லரசுப் பலமானது அமெரிக்கா பக்கமே இருந்தது. அமெரிக்கா சார்பான ஆக்கிரப்புப் போக்கே அதிகரித்திருந்தது. எனவே இக்காலத்தில் அணிசேரா நாடுகளின் தலைவர்கள் சோவியத்துடன் அதிக நட்பை ஏற்படுத்தி இருந்ததில் வியப்பொன்றுமில்லை. குறிப்பிட்ட இக்கால்கட்டத்தில் சோவியத் சீனு என்பன பகைமை நாடுகளாக இருக்கவில்லை. இந்நாடுகள் விடுதலை இயக்கங்களை ஆதரித்தும், உதவியும் வந்தன. வல்லரசுகளுக்கிடையே ஏற்பட்ட போட்டியால் ஆபிரிக்க விடுதலை இயக்கங்களில் சோவியத், கியூபாத் துருப்புக்களின் தலையீடுஇடம் பெற்றது. வெள்ளையரின் இன ஆதிக்கத்தின் மீதிருந்த வெறுப்பால் ஆபிரிக்க நாடுகள் சோவியத்தின் ஆதிக்கத்தை பெருமளவு வரவேற்றன.

### அமெரிக்க அனுதாபம் யார் பக்கம்?

1970களில் இவ்வியக்கத்தில் பொதுவான ஓர் அடிப்படை ஒற்றுமை இருந்தபோதிலும் எகிப்தும், சில ஆபிரிக்கநாடுகளும் அமெரிக்கா சார்புடையனவாக இருந்தன. அணிசேரா இயக்கத்தின் மத்தியில் பல வேறுபாடுகள் இருந்தபோதிலும் அவற்றை ஒற்றுமைப்படுத்திய இருபெரும் சக்திகள் காணப்பட்டன. ஒன்று ஆபிரிக்காவில் ஏற்பட்டிருந்த வெள்ளையரின் இனத்துவேஷம். இவ்வினத்துவேஷத்தை அணிசேராநாடுகள் அனைத்தும் இணைந்து வன்மையாக எதிர்த்துவந்தன.மற்றையது பாலஸ்தீன விடுதலை இயக்கம் தொடர்பானது. பாஸ்தீன விடுதலைப் பிரச்சினையானது முஸ்லிம் நாடுகளை மற்றைய அணிசேரா நாடுகளுடன் ஒற்றுமைப்படுத்தும் சக்தியாக காணப்பட்டது. இவ்விரு அம்சங்களும் தொடர்பாக அமெரிக்காவின் அனுதாபம் யார்பக்கமுண்டு என்பதே இங்கு முக்கியகேள்வியாகும். தென்ஆபிரிக்காவில் வெள்ளையரின் ஆதிக்கத்தை உண்மையில் அமெரிக்கா எதிர்க்கவில்லை. பாலஸ்தீனப் பிரச்சினையில் அமெரிக்கா இஸ்ரேல் சார்பாகவே இருந்துவந்துள்ளது. எனவே பண்பளவில் அமெரிக்காவுடன் அணிசேரா நாடுகளின் நட்புறவு இருக்கமுடியாது. ஆனால் அணிசேரா நாடுகள் சந்தர்ப்பவசமாக அமெரிக்கா சார்பாக உறவுகளைக் கொண்டிருந்துள்ளன.

### அமெரிக்கா பக்கம் அணிசேராநாடுகள் அனுதாபம்

இன்று ஈரான், ஆப்கானிஸ்தான் தொடர்பான பிரச்சினைகள் அணிசேரா இயக்கத்தை ஒரு புதிய கட்டத்திற்கு இழுத்துவந்துள்ளன. ஈரானியப் புரட்சி அணிசேரா நாடுகளை ஐக்கியப்படுத்தியது. ஆனால் பணயக் கைதிகள் விவகாரத்தைப்பயன்படுத்தி அமெரிக்கா அணிசேரா நாடுகளின் அனுதாபத்தை தன்பக்கம் இழுக்க முற்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தான் பிரச்சினை இவ்வியக்கத்தின் வரலாற்றில் பெரிதும் பரிசோதனைக்குரியதாகஅமைந்துள்ளது. இன்று அணிசேரா இயக்கத் தலைவராக இருக்கும் கியூபாவின் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ அணிசேரா நாடுகளின் கொள்கைபற்றி வெளியிட்ட கருத்தானது இங்கு கவனிக்கத்தக்கது.

''அணிசேரா நாடுகள் வல்லரசுகளுடன் இராணுவக் கூட்டுச்செய்யாமல்மட்டும் இருந்தாற்போதாது. ஏகாதிபத்தியத்தை வன்மையாக எதிர்த்துப்போராடவும்வேண்டும்''

இவர் ஈரான்புரட்சி தொடர்பாகக் குறிப்பிடுகையில், ''ஒருபுரட்சி மார்க்ஸிச அடிப்படையிலிருந்தாலென்ன மத அடிப்படையிலிருந்தாலென்ன அதுமக்களின் எதிர்கால நலனைக்கொண்டிருந்தால், ஏதோ ஒருவகையில் மக்களுக்கு முன்னேற்றத்தை அளிக்குமெனக் கருதினால் அப்புரட்சியை ஆதரிக்க வேண்டும். ஒவ்வொரு தேசத்திலும் மக்கள் நலன் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டும். ஏதோ ஒருவகையில் அது மக்கள் நலனை ஏற்படுத்துமாயின் அதனை ஆதரிக்கவேண்டும்'' எனக் குறிப்பிட்டார். இதன்படி ஆப்கானிஸ்தானில் சோவியத்தின் தலையீடு ஆப்கானிஸ்தான் மக்களுக்கு . முன்னேற்றமானதா?

### கூட்டுறவுக் கருத்தரங்கு

(புலோலி)

கூட்டுறவு அபிவிருத்தி சம்பந்தமான கருத்தரங்கொன்று இம்மாதம் 23ம் திகதி புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் திரு. கே. வி. செல்வராசன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் கூட்டுறவுத் துறையை வளர்ச்சி அடையச் செய்வது, புதிய திட்டங்களைச் செயற்படுத்தல், ஊழியர்களின் நலன்களைப்பேணலும், ஊக்குவித்தலும் ஆகிய விடயங்கள் பற்றி ஆராயப்படவுள்ளன. (கு)

புனித தவக்காலம் இன்று ஆரம்பம்

# "நீங்கள் தவம் செய்யாவிடின் அழிந்து போவீர்கள்" -லூக் 3-13

-- வண. மேரி பஸ்ரியன் அடிகள் --

இன்று திருநீற்றுப் புதன். புனித தவக்காலம் ஆரம்பமாகின்றது. தாய்த்திருச்சபை ஒவ்வொரு கிறிஸ்தவன் நெற்றியிலும் மந்திரிக்கப்பட்ட சாம்பலினால் பூசி ''மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்'' என்று அறைகூவல் விடுக்கின்றாள். ''நீங்கள் தவம்செய்யாவிடில் அனைவரும் அழிந்துபோவீர்கள்'' ('லூக்' 3/13) என்ற யேசுவின் எச்சரிக்கையை நமக்கு நினைவுபடுத்துகின்றது. இத்தவக்காலம் யேசுநாதர்தமது திருப்பணியை துவக்குமுன் வனாந்தரங்களிலே மறைவாகச்சென்று கடுந்தவம் புரிந்தார். தவம்தான் அவருக்குத் தேவையா? ஒரு படிப்பினையாகவே அவர் தவம் புரிந்தார். மாற்றானின் சோதனைகளில்,

''மனிதன் அப்பத்தினால் மட்டும் வாழ்வதில்லை; 'உன் ஆண்டவராகிய கடவுளைச் சோதியாதே', உன் ஆண்டவராகிய கடவுளை ஆராதித்து பணிபுரிவாய்'' என்று பதில் கூறிவெற்றிபெற்றார்.

நாற்பது நாட்கள் என்பது திருநூலில் நாம் அடிக்கடி காணும் வார்த்தைகள். இஸ்ராயேல் மக்கள் வனாந்திரத்தில் நாற்பது ஆண்டுகள் அலைந்து பெருந்துயர் பட்டனர். மோயீசன் பத்துக்கட்டளைகளைப் பெறுமுன் நாற்பது நாட்கள் உபவாசமாக இருந்தார். யேசுநாதரும் நாற்பது நாட்கள் செபத்தில் செலவிட்டார். [illegible] கின்ற நாற்பதுநாள் தவம் [illegible] திருச்சபையின் வாழ்விலும் நிரந்தரமாக நிலைபெற்றுவிட்டது.

நமது ஆசைகளையும் விருப்பங்களையும் அடக்கி ஆள்வதிலேதான் தவம் அடங்கியுள்ளது. இயற்கைக்கு இசைவான இச்சைகளை ஒறுத்து வாழும் எதிர்நீச்சல் வாழ்க்கைதான் தவவாழ்க்கை. நமதுபலவீனம் எதில் மிகுதியோ, அதிலேதான் சாத்தான் நம்மை அதிகமாக சோதிப்பான். சாத்தானின் சோதனையில் வெற்றிபெற்ற யேசுவின் அடிகளைப் பின்பற்றி எமது வாழ்வின் பாதையில் வெற்றி நடைபோட தவத்தையும், செபத்தையும் பயன்படுத்துவோம்.

## வடபகுதி சிங்கள மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு!

### தூதுக்குழுவிடம் யாழ். எம். பி. உறுதி

(யாழ்ப்பாணம்)

வடக்கில் வாழும் சிங்கள மக்களின் பல் வேறு பிரச்சினைக்கு விரைவில் தீர்வு பெற்றுக்கொடுப்பதற்கு யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் உறுதி அளித்துள்ளார்.

சிங்கள நலன்புரிச்சங்கத் தலைவர் வண வீரம்புவே விமல பாரதி தேரே வும், மேற்படி சங்கச் செயலாளர் வண கட்வத்துவே தயாவாச தேரோ உட்பட பிரதிநிதிகள் குழு ஒன்று யாழ். எம். பியைச் சந்தித்து வடபகுதியில் வாழும் சிங்கள மக்களின் மேற்படி பிரச்சினைகளை எடுத்துக் கூறியதும் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க ஆவன செய்வ

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணைக்குச் சென்ற பொலிசார் தாக்கப்பட்டனர்

## சந்தேக நபர்களைத்தேடி வலை

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரத்தில் பொலிசார் தாக்கப்பட்டது தொடர்பாக சந்தேக நபர்கள் சிலரை காங்கேசன்துறைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

விசாரணைக்காகச் சென்ற காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் வீரசிங்கம், கான்ஸ்டபிள் உக்குபண்டா ஆகியோர் மாவிட்டபுரம் சந்திக்கண்மையில் வைத்து தாக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் இங்கு இடம்பெற்ற தாலிக்கொடி வழிப்பறிச் சம்பவம் தொடர்பாக சில சந்தேக நபர்களைக் கைது செய்யவே பொலிசார் சென்றதாகவும், அதில் ஒரு சந்தேக நபரைக் கைது செய்யும் சமயத்திலேயே அவர்கள் தாக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

காயமடைந்த சப் இன்ஸ்பெக்டரும், கான்ஸ்டபிளும் தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகின்றனர். (க)

"விலைவாசி அதிகரிக்கும் வேளையில்

# 'மக்கள் கடை' அதிக பலனளிக்கும்"

(அரியாலை)

விலைவாசி நாளுக்குநாள் உயர்ந்துவரும் இக்காலகட்டத்தில் விற்பனை அபிவிருத்தித் திணைக்கள மக்கள் கடையும் மரக்கறிக்கொள்வனவு நிலையமும் கோப்பாய்ப்பகுதி மக்களைத் தேடிவந்திருக்கும் இந்த நாள் ஒருபொன்னாள் ஆகும்''.

இவ்வாறு கோப்பாய்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை கோப்பாயில் விற்பனை அபிவிருத்தித் திணைக்கள மக்கள்கடையையும்-மரக்கறிக் கொள்வனவு நிலையத்தையும் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

கோப்பாய்க் கிராம சபையின் விசேட ஆணையாளரும், யாழ். உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரியுமான திரு. ஜே. எஸ். எஸ். ஆனந்தம் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் திரு. சி.கதிரவேலுப்பிள்ளை தொடர்ந்து பேசுகையில்கூறியதாவது:''இத்திணைக்களக் கிளைகளை கோப்பாயில் திறப்பதற்கு முன்னோடியாக இருந்த விசேட ஆணையாளர் திரு. ஜே. எஸ். எஸ். ஆனந்தத்திற்கும், விற்பனை திணைக்கள வடபிராந்திய உதவி ஆணையாளர் திரு. எஸ். பி பாலசிங்கத்திற்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன்.

விற்பனைத்திணைக்கள வடபிராந்திய உதவி ஆணையாளர் திரு. எஸ். பி. பாலசிங்கம் பேசுகையில் தனது ஒரு வருட குறுகிய சேவைக்காலத்தில் திறக்கப்படும் ஏழாவதுகிளை இதுவாகுமென்றும், திணைக்கள ஊழியர்கள் பூரண ஒத்தாசையும் ஊக்கமும் நல்கினால் ஆக்கபூர்வமான முயற்சிகளைத்தான மேற்கொள்ளமுடியும் என்றும்குறிப்பிட்டார்.

உற்பத்தியாளர்களிடமிருந்துமுதன் முதல்கொள்வனவு செய்யப்பட்ட மரக்கறிகளுக்குரிய பணத்தை விற்பனை அதிகாரி திரு. எம். தனப்பிரபாலன் கோப்பாய்த்தொகுதி பாராளுமன்ற உறுப்பினரிடம் கையளிக்க அவர் அதனை உற்பத்தியாளர்களிடம் வழங்கினார். (க)

## மாவட்ட அமைச்சரிடம் மகஜர்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் கோப்பாய்க் கிளையினர் யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கோனைச் சந்தித்துத் தமது குறைபாடுகள் பற்றிய விரிவான மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

வீதிகள் சீர்கேடு, குடியிருப்புப் பிரச்சினைகள், மின்இணைப்பு கிராமிய வீடமைப்புப் போன்ற விடயங்கள் விரிவாக இம்மகஜரில் காட்டப்பட்டுள்ளது.

இம்மகஜரில், குத்தகை நிலங்களை நிலத்துக்குரியவர்களின் மிரட்டல்களிலிருந்தும், காணிகளைக் குறிப்பிட்ட காலத்துள் நிறுத்திவிடும் நிலையிலிருந்தும் குத்தகை நிலத்தில் பயிர்செய்வோரைப் பாதுகாக்கும் பொருட்டுக் குத்தகை நிலங்களுக்கான சட்டம் வலுவாக்கப்பட வேண்டுமென்றும் கேட்கப்பட்டுள்ளது.

அமைச்சர் மகஜரைப் பார்வையிட்டு ஆவனசெய்வதாக உறுதியளித்ததுடன் மேற்கூறிய பிரச்சினைகளைக் கண்டறிவதற்கு விரைவில் நேரில் வருவதாகவும் உறுதியளித்துள்ளார். (கு)

"வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு:

# விவசாயத்தை துரிதப்படுத்தி நிலைமையை சமாளிக்கலாம்'

- உதவி ஆணையாளர்

(புலோலி)

''வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துவரும் இவ்வேளையில் விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளை மிகத்துரிதமாக மேற்கொள்ளவேண்டும். இதனைக் கருத்திற்கொண்டு கமநலச் சேவை நிலையங்களினூடாக அரசாங்கம் விவசாய நடவடிக்கைகளை ஊக்கிவித்து வருகின்றது.''

இவ்வாறு வியாபாரிமூலையில் பருத்தித்துறை அம்பன் கமநலச்சேவை நிலையத்தின் விவசாய உபகரண விற்பனவுக் கிளை ஒன்றைத் திறந்துவைத்து உரையாற்றிய யாழ்.மாவட்ட கமநலச்சேவை உதவி ஆணையாளர் திரு. கே. பரமலிங்கம் குறிப்பிட்டார்.

யாழ். தொழில் திணைக்கள அதிகாரியும், வியாபாரிமூலை சனசமூக நிலையத் தலைவருமான திரு. ஆ. க. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. பரமலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''எமது பகுதி விவசாயிகள் மிளகாய், வெங்காயம். புகையிலை, உருளைக்கிழங்குபோன்ற சகல பயிர்ச் செய்கைகளிலும் ஈடுபடவேண்டும். இதனை விடுத்து ஒரே பயிர்ச் செய்கையில் மாத்திரம் எல்லா விவசாயிகளும் ஈடுபடுவதனால் ஏதுவித நன்மைகளையும் பெற முடியாது.'' (கு)

இ.தொ.கா. குற்றச்சாட்டுகள்

# "அரசியல்லாபம் கருதியே சுமத்தப்பட்டுள்ளன"

## ஈழவேந்தன் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

''1977 இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்டு ஓடிவந்த தமிழ் அகதிகளுக்கு வடகிழக்கில் இயங்கும் அரசியல் இயக்கங்களோ அல்லது தனிப்பட்ட நிறுவனங்களோ உதவ முன்வரவில்லையென்று அண்மையில் வவனியா நகரசபை முற்றவெளியில் நடைபெற்ற இலங்கைத் தொளிலாளர் காங்கிரஸ் மாநில மகாநாட்டில் குற்றங்கள் சுமத்தப்பட்டிருப்பதாக செய்தி இதழ்களில் படித்துள்ளோம். இக் குற்றச்சாட்டுகள் பொறுப்பற்ற முறையில் தனியே அரசியல் லாபம் மட்டும் கருதி சுமத்தப்பட்டுள்ளன''

தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ்ப்பாண தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசுகையில் இவ்வாறு திரு. ஈழவேந்தன் குறிப்பிட்டார்.

டாக்டர் ச. அ. தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் திரு. ஈழவேந்தன் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''1977 இனக்கலவரத்தையடுத்து அடியும் உதையும் வாங்கி உடமைகளையும் இழந்து உயிர்கள் பலவற்றைப் பறிகொடுத்து தத்தளித்து ஓடிவந்த தமிழ் மக்களுக்கு தமிழ் அகதிகள் மறுவாழ்வுக் கழகம், காந்தீயம், மக்கள் குழு, செடேக் நிறுவனம் போன்ற அமைப்புக்கள் வெளிநாடுகளில் நிதியுதவி பெற்றும் ஏறக்குறைய 4000 குடும்பங்களுக்கு உணவு, உடை உறைவிடம், மூலதனம் உட்பட பல உதவிகளை தொடர்ந்து செய்து வந்துள்ளன.

அரசாங்கத்தின் ஆதரவற்ற நிலையில் ஏன் அரசாங்கத்தின் எதிர்ப்புக்கு மத்தியிற்கூட இவர்கள் ஆற்றிவரும் பணி நல்லுணர்வும் படைத்த எல்லோராலும் வாழ்த்தி வரவேற்க வேண்டியதாகும். ஆனால் இலங்கைத் தொழிலாளர்காங்கிரசோ 1977இனக்கலவரம் ஏற்பட்ட போதுமலையக மக்களுக்குபோதிய உதவிசெய்யாததுடன் தொல்லைகள் தாங்க முடியாது தமிழ்ப்பகுதிகளுக்கு குடிபெயர்ந்துவந்த மக்களுக்கு மறுவாழ்வு கொடுக்க எத்தகைய உதவியும் செய்யவில்லை. ஆனால் தேவையற்ற குதர்க்க வாதத்திலீடுபட்டு தம்மையே முற்றும் அர்ப்பணித்து செயற்படும் இந்நிறுவனங்கள்மீது குற்றங்குறை கண்டு மீண்டும் மலையக மக்களை அடியும் உதையும் வாங்க உயிரிழப்பு ஏற்படக்-கூடிய ஆபத்தான பகுதிகளுக்கு அழைத்துச் சென்று சிங்கள அரசுகளுக்கு ''ஆம்'' ஓதும் குட்டித்தலைவர்களாக விளங்க இருப்பது உண்மையில் ஒரு துயர் தோய்ந்த செயலாகும்.

### முடியோடு கொடியோடு அரசு நடத்திஞேம்

தமிழ் ஈழம் அமைப்பதற்காக மலையக தமிழ் மக்களை நாம் இங்கு அழைத்துவரவில்லை, இந்தியாவிலிருந்து இம் மக்களை இலங்கைக்கு ஒரு கைதரமுன்பே நாம் கொடியோடு முடியோடு சீரோடு சிறப்போடு ஒரு அரசை நடத்தி இருக்கிறோம், மலையக மக்களுக்கு நாம் உதவும் அடிப்படை நோக்கம் மனிதாபிமானமே, அத்தோடு மொழியால், பண்பாட்டால், நாகரீகத்தால் ஏற்றுள்ள வாழ்க்கை நெறியால் எம்மோடு இரண்டறக் கலந்த மக்கள் சொல்லொணு இன்னல்களுக்காளாகி தத்தளிப்பதை நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க விரும்பவில்லை என்பதேயாகும். வெறும் வாய்ச் சொல் வீரராக விளங்கவிரும்பாததால் மத்தியவங்கி தமிழ் ஊழியர் சங்கத்தின் தலைவன் என்றமுறையில் பல நெருக்கடிக்கிடையிற்கூட சென்ருண்டு நடுப்பகுதியில் மலையக தமிழ் மக்களை கைதூக்கி உதவும் நோக்குடன் தமிழ் அகதிகள் மறு வாழ்வுக் கழகத்துக்கு 5000ரூபாயை நன்கொடையாக வழங்கியுள்ளோம் என்பதனையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேம்." (இ)

குரும்பசிட்டி நகைத்திருட்டு:

# எதிரி குற்றவாளி: தண்டனை மார்ச் 3-ல்

(மாவிட்டபுரம்)

குரும்பசிட்டி நகைத்திருட்டு வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதால் 1000 ரூபா பிணையில் செல்ல அனுக்சப்பட்டு தண்டனை வழங்குவது ஒத்தி வைக்கப்பட்டது.

குரும்பசிட்டியைச் சேர்ந்த வீடொன்றில் விருந்தாளியாக வந்து தங்கியிருந்த திருகோணமலையைச் சேர்ந்த சூசைப்பிள்ளைநடேசன் அல்லது குமார் என்பவர் அவ்வீட்டிலிருந்த 60 ஆயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியுடைய நகைகளைத் திருடிச் சென்றிருந்தார்.

இந்நபரை திருகோணமலையில்வைத்து காங்கேசன்துறைப் பொலிசார் கைது செய்து திருடப்பட்ட நகைகளையும் கடையொன்றிலிருந்து மீட்டிருந்தனர்.

மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்ட இந்நபர் மீண்டும் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்ட சமயம், அவர்மீது வழக்காளி வீட்டிலிருந்து 60ஆயிரத்து471 ரூபா பெறுமதியான நகைகளை திருடியது, அவற்றை வைத்திருந்தது ஆகிய இரு குற்றச்சாட்டுகளைக் காங்கேசன்துறை பொலிஸ் சார்ஜன்ட் திரு. தியாகராசா தாக்கல் செய்தார்.

இக்குறறச்சாட்டுகளுக்கு தான் குற்றவாளியே என்று எதிரி ஒப்புக் கொண்டதால் அவரை 1000 ரூபா பிணையில் செல்லுமாறும் மார்ச் 3ம் திகதி தண்டனை வழங்கப்படுமென நீதிபதி திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமி தெரிவித்தார்.

இதனையடுத்துப் பொலிசார் திருமலையில் கடையொன்றில் வைத்துக் கைப்பற்றிய நகைகள் தம்முடையவையெனவும் அவற்றைத்தம்மிடம் வழங்குமாறு நகைக்கடைக்காரரான ஏ. மொகமட் ஷமீர் என்பவர் நீதிபதியிடம் விண்ணப்பித்தார். சட்டத்தரணி சி. நாகராசா அவரின் சார்பில் ஆஜராகி இல்விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தார்.

வழக்காளி தரப்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் இதனை ஆட்சேபித்து, எதிரி நகைகளை எடுத்துச் சென்ற செட்டிகடையிலிருந்து பொலிஸாரால் கை பற்றப்பட்டதாகச் சுட்டிக்காட்டி, திருட்டு நகைகளை வைத்திருந்ததாக மேற்படி கடைக்காரர் மீது வழக்குத் தொடரப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மார்ச் 3ந் திகதி இவை பற்றி ஆராயலாமெனக் கூறிய நீதிபதி, அதுவரை நகைகளை நீதிமன்றத்தில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

வழக்காளி தரப்பில் காங்கேசன்துறைப் பொலிஸாருடன் சட்டத்தரணிகள் ஆர். ஜே. செல்வரத்தினம் செல்வி மோகாந்தி செல்வரத்தினம் ஆகியோரும், எதிரி தரப்பில் சட்டத்தரணி எம். ஸ்ரீதரனும் ஆஜராகினர்.

# குப்பிளான்சுடலையடி மரணம் சந்தேக நபர்கள் சரண்!

(மாவிட்டபுரம்)

குப்பிளான் சுடலையடி மரணம் தொடர்பாக ஐவர் மல்லாகம் நீதிபதியால் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

வசாவிளானைச் சேர்ந்த இரு பகுதியினருக்கிடையில் ஆலய நிர்வாகம் ஒன்று தொடர்பாக தகராறு இருந்து வந்ததாகவும், இதில் ஒரு பக்கத்தைச் சார்ந்த கணபதிப்பிள்ளை கதிர்காமநாதன் என்பவர் மறுபக்த்தினரால் கடத்திச் செல்லப்பட்டு விட்டதாக காங்கேசன்துறைப் பொலிசில் புகார் ஒன்று செய்யப்பட்டதாகவும், பொலிசார் விசாரணை நடத்திய சமயம் கதிர்காமநாதன் குப்பிளான் சுடலை மடத்தில் மரணமடைந்திருக்கக் காணப்பட்டதாகவும் இச்சம்பவம் பற்றி கூறப்படுகிறது.

இம்மரணம் குறித்து திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. க. பரமநாதன் விசாரணை நடத்திய சமயம் காலமானவரது அருகில் இருந்த இருபிரிவினரிடையே … சமர்ப்பிக்கப்பட்டன. மரணத்திற்கான காரணத்தை அறிய முடியாத நிலையில் பகிரங்கத் தீர்ப்பு வழங்கப்பட்டது

மேற்படி நபரது மரணம் தொடர்பாக விசாரணை செய்த சுன்னுகம், காங்கேசன்துறை பொலிசார் சந்தேகத்தின் பேரில் நடராசா நாகராசா, சுவாமிநாதன் தம்பிஐயா ஆகியோரை கைது செய்திருந்தனர். மேலும் பொலிசாரால் தேடப்பட்ட சந்தேக நபர்களான கந்தசாமி சிவபாதம், நாகமுத்து கந்தசாமி, செல்லையா இராசதுரை ஆகியோர் பொலிசில் சரண் புகுந்தனர்.

இந்நபர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமி உத்தரவிட்டார்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகள் ஆர். ஜே. செல்வரத்தினம், சு. நடராசா, எம். ஸ்ரீதரன், செல்வி மோகாந்தி செல்வரத்தினப ஆகியோர் ஆஜராகினர்.

வழக்காளி தரப்பில் சட்டத்தரணி ரி. தம்பிரத்தினம் ஆஜரானர். (கு

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

"தமிழ் நாட்டில்

# இந்துக்களும் முஸ்லிம்களும் நேச உறவுடன் வாழ்கின்றனர்"

(யாழ்ப்பாணம்)

தமிழ் மொழி பல சமயத்தவர்களின் இலக்கியங்களால் வளம்பெற்றுள்ளது. அறபு நாட்டில் இருந்து வந்த அரேபியர்கள் தமிழ் மொழியைக் கற்று இஸ்லாமிய இலக்கியங்களை தமிழ்மொழியில் உருவாக்கி தமிழை வளம்பெறச் செய்துள்ளனர். இற்றைக்கு நானூறு ஆண்டுகளுக்கு முன் தமிழ்மொழியில் ஆக்கப்பட்டுள்ள இலக்கியங்களே இப்போது எமக்குக் கிடைத்துள்ளன. எமது ஆராய்ச்சிகள் தொடருமானால் மேலும் பல இயக்கங்களைப் பற்றி அறியக் கூடிய வாய்ப்பு எமக்குக் கிட்டும். இதற்குப் பொருத்தமான இடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமே.''

இவ்வாறு அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த் துறையின் சார்பில் ''தமிழ்நாடும் முஸ்லிம்களும்'' என்னும் தலைப்பில் விசேஷட உரையாற்றிய தென்னிந்திய பிரபல பத்திராதிபரும் 'பிறை' ஆசிரியருமான மௌலவி எம். அப்துல் வஹாப் குறிப்பிட்டார்.

இவ்விஷேட கூட்டத்திற்கு தமிழ்த் துறைப் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமைதாங்கினார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:- தமிழ் நாட்டின் முஸ்லிம்களின் தொடர்பு நபிகள் நாயகத்தின் காலத்திலேயே ஏற்பட்டுவிட்டது. அதற்கு முன்னர் அறபிகள் தென்னிந்தியாவுடன் குதிரை வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தனர். இதுபற்றி பட்டினப்பாலை குறிப்பிடுகின்றது. அறபுநாட்டுக் குதிரைகளை பராமரிப்பதற்கு ராவுத்தர்களும் வர்த்தக நோக்கமாக மரைக்காயர்களும் சமயப் பிரச்சாரங்களுக்கு லெப்பைகளும் தமிழ் நாட்டுக்கு வந்து கரையோரப் பட்டினங்களில் குடியேறி வாழ்ந்தனர். இந்தியாவில் அந்நியரின் ஆதிக்கத்தை எதிர்ப்பதில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் முன்னணியில் இருந்து போராடினர். போரரட்டக் கொடியில் இந்திரனின் வச்சிரமும், இளம்பிறையும் ஒன்ருகப் பொறிக்கப்பட்டிருந்ததை பாரதி சிறப்பாக வர்ணித்துப் பாடியுள்ளான். தமிழ் நாட்டில் இந்துக்களும் முஸ்லிம்களும் பண்டு தொட்டு நேச உறவோடு வாழ்கின்ருர்கள். முஸ்லிம்களையும் தமிழ் மக்களையும் தமிழ்மொழி இணைக்கின்றது. தமிழ்மொழியின் செழுமைக்கு ஆக்கப் பணி புரிவோம்.

துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பேசுகையில் கூறியதாவது:

''யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் ஏனைய மாணவர்களுடன் முஸ்லிம்களும் நட்புடன் கல்வி பயில்கின்ருர்கள். தமிழ்மொழி மூலம் கல்வி கற்கும் தமிழ் மாணவர்களுக்கும், தமிழ்பேசும் முஸ்லிம் மாணவர்களுக்கும் பொருத்தமான பல்கலைக்கழகம் இதுவாகும். இங்கிருந்து முஸ்லிம் மாணவர்களை மாற்றுவதற்கு எடுக்கும் நடவடிக்கை, முஸ்லிம் சமூகத்துக்குப் பெரும் துரோகமாக முடியுமென இதில் ஈடுபட்டோருக்கு ஜனப் எஸ். எம். கமாலுதீனும் கூறியுள்ளார். பெரும்பாலான முஸ்லிம்கள் இங்கு கல்வி கற்பதை விரும்புகின்றனர். கிறிஸ்தவ மாணவர்கள் இந்து நாகரிகத்தைக் கற்கின்றனர். இந்து மாணவர்கள் அறபு மொழியையும், இஸ்லாமிய நாகரிகத்தையும் கற்பதற்கு வழி செய்வதன் மூலம் இப்பல்கலைக் கழகத்தில் இத்துறை தொடர்ந்திருக்கும். இத்துறையை மாற்றுவதற்குச் சில பெரிய புள்ளிகள் முயன்ருலும் நாம் இடமளிக்கமாட்டோம்.''

தொடர்ந்து உரையாற்றிய துணைவேந்தர் வித்தியானந்தன் கூறியதாவது:

இலங்கை முஸ்லிம்களின் தாய்மொழி, தமிழ் என்பதை நான்காவது அனைத்துலக இஸ்லாமியத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தமிழ் இலக்கியத்திற்கும், தமிழ்மொழிக்கும் முஸ்லிம்கள் சிறந்த பங்களிப்பைச் செய்துள்ளனர். 'கலையும் பண்பும்' என்னும் நூலை நான் எழுதியபோது, என்னைப் பலர் முஸ்லிம் என்றே நினைத்துக் கொண்டனர் எனவும் குறிப்பிட்ட துணைவேந்தர், எப்பல் கலைக்கழகத்திலும் செய்து கொடுக்கப்படாத தொழுகை வசதிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் செய்துகொடுக்கப்பட்டதெனவும் குறிப்பிட்டார். (கொ)

---

## மாநில அரசு கலைப்பு:

## ஜனநாயகத்தை அவமதிக்கும் செயல் என்கிருர் கிருபளானி

புதுடில்லி, பெப். 19

இந்திரா அரசு, இந்திரா காங்கிரஸ் பதவியில் இல்லாத ஒன்பது மாநிலங்களையும் கலைத்தது ஜனநாயகத்தை அவமதிக்கும் செயலாகுமென்று ஆச்சார்யா கிருபளானி தெரிவித்துள்ளார்.

ஜனநாயக விரோதச் செயலே இதுவென்று முன்ஞள் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் தெரிவித்துள்ளார்.

---

## கிரிக்கட் போட்டிகள்

(அரியாலை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் - யாழ் பரியோவான் கல்லூரிக்குமிடையில் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

முதலில் ஆடிய பரியோவான் கல்லூரி 9 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 239 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. என். வசந்தன், ஈ. ரி. தஞ்சரத்தினம் ஆகியோர் முறையே 60. 51 ஓட்டங்களைப் பெற்றனர். யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். சிவகுமார் ·53 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுகளைப் பெற்ருர்.

யாழ்ப்பாணக் கல்லூரி 149 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கட்டுகளையும் இழந்தது. பி. ஆனந்தகுமார், பதுமநிதி ஆகியோர் முறையே 40, 31 ஓட்டங்களைப் பெற்றனர். எஸ். தனஞ்சயன் 21 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுகளைக் கைப்பற்றினர்.

பரி. யோவான் கல்லூரி தனது இரண்டாவது ஆட்டத்தில் 3 விக்கட்டுகள் நஷ்டத்திற்கு 132 ஓட்டங்களைப்பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. ஈ. ரி. தஞ்சரத்தினம், ஈ. யே. ஜெபரத்தினம் ஆகிய இருவரும் வெளியேருமலே முறையே 53, 35 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஆட்ட நேர இறுதியில் யாழ்ப்பாணக் கல்லூரி 7 விக்கட்டுகளை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றது. எவ். டி. ஸ்ரீபன், எஸ். சிவகுமார் ஆகியோர் முறையே 33, 28 ஓட்டங்களைப் பெற்றனர். ஈ. யே. ஜெபரத்தினம் 7 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளைக்கைப் பற்றினர். (இ)

ஃ ஃ ஃ

(அரியாலை)

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. கிரிக்கட் குழுவினருக்கும், பரி. யோவான் கல்லூரிக் கிரிக்கட் குழுவினருக்குமிடையே பரி. யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கட்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பரி. யோவான் கல்லூரி 4 விக்கட்டுகளை இழந்து 255 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. டி. எம். இரத்தினராசா ஆட்டமிழக்காமல் 120 ஓட்டங்களையும், எஸ். கருணகுமார் 78 ஓட்டங்களையும் பெற்றனர்.

வை. எம். சி. ஏ. குழுவினர் சகல விக்கட்டுகளையும் இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றனர். யே. ஆர். குமாரசுவாமி 81 ஓட்டங்களையும், ஈ. டி. அலெக்சாந்தர் 64 ஓட்டங்களையும் பெற்றனர். எஸ். கருணகுமார் 45 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கட்டுகளையும் கே. விசாகன் 22 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

2-வது இன்னிங்ஸில் பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டி 1 விக்கட்டு நஷ்டத்துக்கு 62 ஓட்டங்களைப்பெற்றது. (இ)

ஃ ஃ ஃ

(அரியாலை)

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரிக் கிரிக்கட் கோஷ்டிக்கும், யாழ். வை. எம். சி. ஏ கிரிக்கட் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற கிரிக்கட்போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கோஷ்டி 7 விக்கட்டுகள் நஷ்டத்திற்கு 263 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. செல்லப்பா 76 ஓட்டங்களையும் மல்லிமான் 72 ஓட்டங்களையும் பெற்றனர், சிவசுமித்திரன் 62 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளையும், தேவதாசன் 38 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும் பெற்றனர்.

அடுத்தாடிய யாழ். வை. எம் சி ஏ கோஷ்டி சகல விக்கட்டுகளையும் இழந்து 86 ஓட்டங்களை எடுத்தது. குமாரசுவாமி வேதநாயகம் ஆகியோர் முறையே 23 23 ஓட்டங்களைப் பெற்றனர். பி. ரவிராஜ் 6 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளைக் கைப்பற்றினர்.

பற்றிக்ஸ் கல்லூரி இரண்டாவது ஆட்டத்தில் 3 விக்கட்டுகளை இழந்து 17 ஓட்டங்களைப் பெற்றது.

......

## மன்னர் மக்களுக்கு

# 'வீடமைப்பு கடன் வழங்கப்படவில்லை'

## பிரதமருக்கு மகஜர்

(மன்னர்)

மன்னர் மாவட்டத்திலிருந்து வீடமைப்புக் கடன்கோரி அனுராதபுரத்தில் இயங்கிவரும் தேசிய வீடமைப்பு இலாகாவுக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டன. மன்னர் மாவட்டத்திலிருந்து அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் பரிசீலிக்கப்பட்டது ஆனல் இதுவரை வீடமைப்புக் கடனில் ஒரு பகுதியேனும் விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படவில்லை.

4 ஆயிரம் ரூபாமுதல் 10 ஆயிரம்ரூபாவரை கடன் கோரி விண்ணப்பிக்கப்பட்டது. இந்த விஷயத்தில் அனுராதபுரத்தில் இயங்கிவரும் தேசிய வீடமைப்பு இலாகா அசிரத்தை காட்டிவருவதாக கருதப்படுகிறது.

வீடமைப்புக்கடன்கள் காலதாமதமின்றி வழங்கப்படும் என பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா உறுதியளித்துள்ளார். இதற்கமைய மன்னர் மாவட்டத்தில இருந்து கடன் கோரி விண்ணப்பித்தவர்கள் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பவுள்ளார்கள்.

இம்மகஜரை மன்னர் மாவட்ட அமைச்சரும், மூதூர் எம். பியுமான ஜனுப் எம். ஈ. எச். மஹ்ரூப் மூலம் அனுப்பவுள்ளார்கள். (க)

## இலவசமாக விநியோகம்

(யாழ்ப்பாணம்)

அங்கவீனர்கள் பயன் படுத்தக்கூடிய நொண்டிப் பொல்லுகளை இலவசமாக வழங்குவதற்கு யாழ்ப்பாணம் மில்க்வைற் ஸ்தாபனத்தார் முன் வந்துள்ளார்கள். பெற்றுக் கொள்ள விரும்புவோர் அத்தாட்சிக் கடிதம் கொடுத்து நேரில் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளனர். (கு)

## மகாவலியில் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் சுவாமி ஞானப்பிரகாசர் இளைஞர் மன்றத்திலிருந்து 10 தொண்டர்கள் அதன் செயலாளர் திரு. மா. அலெக்ஸ் சந்திரபோகன் தலைமையில் மகாவலி அபிவிருத்திச் சிரமதானத்திற்கு யாழ். மாவட்டக் குழுவில் அங்கம் வகித்துச் செல்ல வுள்ளனர். (நா)

## சமய அறிவுப் போட்டி

(சுழிபுரம்)

வழக்கம்பரை சன சமூக டஜனைச் சபையினர் சுழிபுரம் கம்பளை அம்மாள் ஆலய கும்பாபிஷேகத்தையொட்டி 'நிலையக் குரல்' ஆதரவில் சமயப் போட்டி, கேள்வி பதில் மூலம் நடாத்தவுள்ளனர் போட்டியை நடாத்த குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. (கு)

---

விவசாயிகளே! இதோ வந்துவிட்டது!!

நீங்கள் எதிர்பார்த்த அற்புதமான, சிக்கனமான, சக்திவாய்ந்த சர்வபூச்சிநாசினி



பரத்தியன் 63

எல்லாப் பயிர்களையும் பாதிக்கும் எல்லாப் பூச்சி, புழுக்களையும் உடனே கட்டுப்படுத்துவதுடன் நீடியகாலம் தங்கும் தன்மையும் தரும்.

கிடைக்குமிடம்:
அக்ரேஸ் லிமிட்டெட்,
59, கந்தப்பசேகரம் வீதி,
யாழ்ப்பாணம்.

ஏகவிநியோகஸ்தர்கள்:
ஜெகெம்
39, பிறிஸ்டல் பில்டிங், 51, யோக் வீதி,
கொழும்பு-1. தொலைபேசி: 24353

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இந்திராவின் சவாலைச் சமாளிக்க

# எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும்!

## சரண்சிங் அழைப்பு விடுக்கிறார்

புதுடில்லி, பெப். 19

கலைக்கப்பட்ட இந்திய மாநிலங்களில் நடைபெறவிருக்கும் சட்டசபைத் தேர்தல்களில் ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சியைத் தோற்கடிக்க, எதிர்க்கட்சிகள் யாவும் இணைந்து புதிய அணியொன்றை உருவாக்குவது குறித்து ஆலோசனை செய்யப்பட்டுவருகிறது.

எதிர்க் கட்சித் தலைவர்கள் புதிய எதிரணி அமைப்பது குறித்து ஆலோசனை வழங்கி வருவதுடன் வலியுறுத்தியும் வருகின்றனர்.

லோக்தள் தலைவர் திரு. சரண்சிங், ஜனதாக் கட்சித் தலைவர் திரு. ஜெகஜீவன்ராம் ஆகிய தலைவர்களே புதிய எதிரணி அமைக்கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திவருகின்றனர். (இ)

### கலைக்கப்பட்ட மாநிலங்களில்

# இந்திராகாங்கிரஸுக்கு 350ல் 249 லோகசபை இடங்கள்

புதுடில்லி, பெப். 19

கலைக்கப்பட்ட ஒன்பது இந்திய மாநிலங்களிலும் கடந்த இடைக்காலத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கே அதிக ஆதரவு கிடைத்திருப்பதாகப் புள்ளி விபரமொன்று தெரிவிக்கின்றது.

ஒன்பது மாநிலங்களிலும் உள்ள 350 லோகசபைத் தொகுதிகளில் 249 தொகுதிகளை இந்திரா காங்கிரஸ் கட்சியே கைப்பற்றியிருந்தது.

இந்த மாநிலங்களில் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு 35.9 வீத வாக்குகளே கிடைத்தன என்றும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. (இ)

### மாநில ஆட்சி கலைப்பு

# மத்திய அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் வழக்கு

புதுடில்லி, பெப். 19

இந்திரா காங்கிரஸ் ஆட்சியில் இல்லாத 9 மாநில அரசுகளைக் கலைத்து, அங்கு ஜனாதிபதி ஆட்சி அமுல்செய்ததை எதிர்த்து ஆளும் இந்திரா காங்கிரஸ் அரசுக்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்யப்படவிருக்கிறது.

கலைக்கப்பட்ட மாநிலங்களில் ஆட்சியிலிருந்த கட்சிகள் உட்பட, எதிர்க்கட்சிகள் மத்திய அரசுக்கு எதிராக இந்திய உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்ய முன்வந்துள்ளன.

இதற்கான ஆலோசனைகள் உயர்மட்டத்தில் நடைபெற்று வருகிறது. (இ)

### இந்தியாவின் பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்

### பிரபல வாரஏடு 'பிளிட்ஸ்' தகவல்

பம்பாய், பெப். 18

"இந்தியாவின் வட எல்லையில் 10 லட்சத்துக்குமதிகமான துருப்புக்களைக் கொண்ட சீன ராணுவம் நிலைகொண்டுள்ளதும், இந்தியாவின் வட-கிழக்கு எல்லையிலும், பிரமபுத்தா நதிப் பள்ளத்தாக்கிலும் சீனச் சார்பு பிரிவினைவாதிகள் மேற்கொண்டுள்ள பயங்கர நடவடிக்கைகளும் இந்திய பந்தோபஸ்துக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது" என்று இங்கிருந்து 'பிளிட்ஸ்' வார ஏடு எழுதுகிறது.

இந்தியாவுக்கு எதிராக ஆயுத மோதலைத் தொடக்குமாறு இந்தியாவின் அண்டை நாடுகளுக்கு சீனு ஆயுதங்களை வழங்கி வருகிறது என்றும் இப்பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தியாவின் மிகப்பிரபல்யம் வாய்ந்த இடதுசாரி ஏடான 'பிளிட்ஸ்' மேலும் எழுதுவதாவது:

"பாகிஸ்தானிய ராணுவம் அண்டை ஆண்டுகளில் அவசரம் அவசரமாக மீண்டும்

(7-ம் பக்கம் பார்க்க)

### பூமிக்கு வயது 100,000!

மாஸ்கோ, பெப். 19

இப்பூமி 100,000 ஆண்டுகளுக்கு முன்னர் தாம் ஒரு கிரகமாக உருவாவது என்ற முடிவுக்கு ரஷ்ய விஞ்ஞானிகள் வந்துள்ளனர். வாயுக்களின் கதிரியக்கமற்ற ஓரகத் திண்மத்தின் உருவாக்கங்களை ஆராய்ந்த பின்னரே அவர்கள் இந்த முடிவை உறுதிப்படுத்தியுள்ளனர். பூமி உருவான காலத்தில் தோன்றிய வாயுக்களை அது இன்னமும் தனது கர்ப்பாயசத்தில் வைத்திருக்கிறதென்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள், (ஏபிஎன்)

### ஷா மீதான விசாரணை:

# சர்வ தேச ஆணைக்குழு நியமனம் ஈரானும் இணக்கம்

நியுயோர்க், பெப். 19

ஈரானிய ஷாவின் நடவடிக்கைகள் குறித்து விசாரணை செய்வதற்குச் சர்வதேச ஆணைக்குழு நியமிக்கும் முயற்சிக்கு ஈரானும் இணக்கம் தெரிவித்துள்ளது.

வாய்மொழி மூலமே இந்த இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்துச் சர்வதேசத் தலைமைக் குழுவின் உறுப்பினர்களின் பெயர்களை ஐ. நா. பொதுச் செயலாளர் டாக்டர் குர்த் வால்ட் ஹெய்ம் விரைவில் அறிவிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெலிங்டன்
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்-ஜெயலலிதா
வந்தாளே மகராசி
(புதிய பிரதி)

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ரஞ்சன்-T. R. ராஜகுமாரி
நடித்த
சந்திரலேகா
(புதிய பிரதி)

REGAL (Jaffna) Phone: 3
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 P.m
For the first time in 42 years. One film Sweeps, all the Major Academy Awards.
WINNER OF 5 ACADEMY AWARDS
Best Picture
JACK NICHOLSON
ONE FLEW OVER THE CUCKOO'S NEST
Adults only Color

ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
இல்லறம் இன்பமாக விளங்க "இருவர் உள்ளம்" இணையவேண்டிய அவசியத்தை விளக்கும்
இணையற்ற குடும்பச் சித்திரம்
சிவாஜி கணேசன்-சரோஜா தேவி-எம்.ஆர். ராதா
பாலாஜி-ரங்கராவ் இன்னும் பலர் நடித்த
இருவர் உள்ளம்
(புதிய பிரதி)
திரைக்கதை வசனம்: கலைஞர் கருணாநிதி

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி விஜயா
கவிதா - சந்திரமோஹன்
நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்மன்ட் கலர்)

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி: 10-30, 4-45, 7-00 &9-45
JIM BROWN
in
Slaughters Bigripoff

SHANTHI JAFFNA. Phone: 7642.
Daily 5 Shows — LAST WEEK!
"GRIZZLY"
Scope—Color
22-2-80—"THE SEVEN UPS" —Color—
"ACTION" Never seen before on a Jaffna Screen!
Coming: WATCH OUT, WE'RE MAD! —Color—

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, பி. ப. 2-30, 6-15, இரவு 9-30
சிவாஜி-தேவிகா-விஜயகுமாரி
சாந்தி
22-02-80 முதல்
ஸ்ரீகாந்த் - நாகேஷ் - சௌகார் ஜானகி நடித்த
எதிர் நீச்சல்

SRIDHAR JAFFNA
Daily 5 Shows at 10-30 a.m. 2-30, 4-45, 7-00 and 9-30 p.m.
A GUN IN HIS SOCK, A TIRE IRON IN HIS BELT AND NO BADGE. THE STORY OF EDDIE. THE BEST EX-COP IN THE BUSINESS
BADGE 373
(Adults only)
Coming Soon: CHINA TOWN
THAT MAN BOLT

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
தேன் சிந்துதே வானம்
(புத்தம் புதிய பிரதி)

லிடோ (யாழ்.நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-30 & 9-30
போன்: 7698
தெய்வ மகன்

# இன்றைய பலன்

மாசிமாதம் 8-ம் திகதி
(20-2-80)
புதன்கிழமை

மேடம்: மற்றவர்களிடம் உதவிக்கிடமுண்டு, தொழில் சிறப்புமுண்டு, வாழ்க்கையில் வசந்தம் நிலவும்.

இடபம்: செய்யும் தொழிலில் சிரமங்கள் தோன்றும், பொருஞ்செலவும் உண்டு, கல்வியிலும் மந்தநிலை ஏற்படும்.

மிதுனம்: தன்மானமிகு திக்குமிடமுண்டு, மாதுருவழியாலும் ஆதரவு கிடைக்கும், வாகன சுகமும் உண்டு.

கடகம்: இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும், பூமிச் சிறப்புமுண்டு, வியாபாரத்துறையில் லாபமுண்டு.

சிங்கம்: அன்னியவாசமும் ஏற்படும், ஆசாரக் குறைவுமுண்டு, உறவினர் பகையுண்டு, மௌனம் நன்று.

கன்னி: அரசினர் ஆதரவுண்டு, அன்னியர்: உதவியுண்டு, பொருளாதாரத் துறையிலும் முன்னேற்றம் காணும்.

துலாம்: துயர்படிந்த நாள் சிலர் உதவி செய்யப்போய் குறைகேட்க நேரிடும், அதிக முதலீட்டைத் தவிர்க்கவும்.

விருச்சிகம்: செல்வாக்கு வளர்ச்சியடையும், இனபந்துக்களின் ஆதரவும் உண்டு, கால்நடை விருத்திக்குமிடமுண்டு, ஆலய வழிபாடு நன்று.

தனுசு: தொழில் விருத்தியுண்டு, தொல்லைகள் நிவர்த்தியுண்டு, குடும்பத்தில் தென்றல் வீசும், வரவேற்கும் நாள்.

மகரம்: பொருள்வளத்தில் புதுப் பொலிவு காணும், சிலருக்குப் பிறந்தகத்தின் எண்ணமும் தலைதூக்கும், பெரியோர் ஆதரவும் உண்டு.

கும்பம்: வீண் செலவுகள் ஏற்படும், உறங்கிக் கிடந்த பகை மீண்டும் தலைதூக்கும், முன்யோசனை வேண்டும்.

மீனம்: மனதில் அமைதி குன்றும், விஷமிகளின் தொல்லைகள் அதிகரிக்கும்.

திருமலை
க.வேலுப்பிள்ளை
56/14. ஆத்திசூடி வீதி,
யாழ்ப்பாணம்.

# நூற்றாண்டு விழா

(வேலணை)

வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையின் நூற்றாண்டு விழா சம்பந்தமான ஆலோசனைக் கூட்டமொன்று அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மேற்படி நூற்றாண்டு விழாவினை வெகு விரைவில் திறம்பட நடாத்த வேண்டுமெனவும் கல்லூரிக்கு மின்னொளி இணைப்புச் செய்து ஆரம்பஸ்தாபகர் வி. கந்தப்பு வாத்தியாரின் நினைவு நவப்படம் ஒன்றை ஞாபகார்த்த மண்டபமொன்றில் வைக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. வெகு விரைவில் விழாவினை நடாத்துவதற்குச்சபையொன்றும் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. (கு)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
கமலஹாசன்-சுஜாதா
உயர்ந்தவர்கள்

# விசேட பொதுக்கூட்டம்

(சுழிபுரம்)

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்க விசேட பொதுக்கூட்டம் சித்தன்கேணி கணேச வித்தியாலயத்தில் இம்மாதம் 24ம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

உப-விதி திருத்தம், எண்பார்வை அறிக்கை ஆகிய இரு விடயங்களும் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளன. கூட்டுறவுப் பரிசோதகர் எம். தம்பிராசாவினால் இக்கூட்டம் கூட்டப்பட்டுள்ளது. (கு)

# புங்குடுதீவு ப.நோ.கூ.ச. தலைவர் ராஜினாமா!

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. நா. தர்மலிங்கமும் இயக்குனர் சபை உறுப்பினர் திரு. க. வே. ஏரம்புவும் தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளனர்!

பம்பாய் வெங்காய கொள்முதல், விற்பனை தொடர்பாக எழுந்த பிரச்னையைத் தொடர்ந்தே இவர்கள் தமது ராஜினாமாக் கடிதத்தை ஊர்காவற்றுறை எம். பி. திரு. கா.பொ. இரத்தினத்துக்கு அனுப்பியுள்ளார்கள். (கொ-கு)

# வடபகுதி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக அவர் உறுதி அளித்துள்ளார்.

சிங்கா மகா வித்தியாலய தேவைகளைப் பூர்த்தி செய்து தரும்படி இக்குழுவால் வேண்டுகோள் விடப்பட்ட போது அதையேற்றுக்கொண்ட எம். பி. உடனடியாக பாடசாலைக் கட்டிட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு மேற்படி பாடசாலைக் கட்டிட வேலைக்குத்தேவையான மதிப்பீட்டை எடுத்துச் தன்னிடம் சமர்ப்பிக்கும் படி தெரிவித்துள்ளார். (கொ-கு)

# இந்தியாவின்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதபாணியாக்கப் படுவதைப் பார்க்கும்போது, வாஷிங்டனது உதவியுடன் இந்தியாவுக்கு எதிரான திட்டங்கள் உருவாகியுள்ளதை உணரலாம். இந்தியாவின் எல்லைப்புறத்தையொட்டிய பிரதேசங்களில் சீனு ஆயுதங்களையும் துருப்புக்களையும் குவித்து வருகிறது, இந்தியாவின் ஆக்கிரமிக்கப்பட்ட காஷ்மீர் பகுதியின் வழியே செல்லும் கரகோரம் நெடுஞ்சாலை ராணுவ நோக்கத்துக்காகவே கட்டப்பட்டது என்பது இன்று தெளிவாகிவிட்டது. இந்திய எல்லையை ஒட்டியுள்ள ஸிங்கியாங் ரெயில்வே பாதையின் வழியே ராணுவத் தளபாடங்கள் கொண்டுசெல்லப் படுகின்றது. 10 லட்சம் துருப்புக்களைக் கொண்ட ராணுவ டிவிஷன்களுக்குத் தேவையான எண்ணெய் வினியோகத்துக்கான குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. கரகோரம் நெஞ்சாலையின் போருபாய நிலையைக் குறைவாக மதிப்பிட முடியாது. மணிப்பூர், அஸாம் போன்ற மாகாணிங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் பிரிவினைவாதிகளது நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. பங்களாதேஷ் முதல் வங்காள விரிகுடா வரை வட கிழக்குப் பகுதிகளின் சம்மேளனம் ஒன்றைவெளிநாட்டு உதவியுடன் உருவாக்க வேண்டும் என்று கூறும் நூல் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. இந்தியா-விரோத நடவடிக்கையில் பங்களாதேஷையும் இழுத்து விடுவதே சீனுவின் நோக்கம்" என்றும் பிளிட்ஸ் பத்திரிகை எழுதியுள்ளது.

# யாழ். கன்னியர் மடம் வெற்றி

(பண்டத்தரிப்பு)

மாதகல் விபுலானந்த படிப்பகத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடாத்தப்பட்ட மின்னொளி கரபந்தாட்ட சுற்றுப்போட்டியில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியுள்ளது. பெண்களுக்கான வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் திருக்குடும்பகன்னியர் மடக் கோஷ்டி வெற்றிபெற்றுள்ளது. (அ)

# பாடசாலை தரம் உயர்வு

(புலோலி)

பருத்தித்துறைத் தொகுதியில் உள்ள தும்பளை சைவப் பிரகாச வித்தியாசாலை, மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளதாக வடமாநிலக் கல்வியதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்.

பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தின் கோரிக்கைக்கிணங்க பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினத்தின் சிபார்சின் பேரில் இப்பாடசாலை தரமுயர்த்தப்பட்டுள்ளது. (அ)

# பஸ் ஊழியருக்கு சைக்கிள்

(நெல்லியடி)

வடபிராந்திய இ. போ. ச. டிப்போக்களில் பணிபுரியும் ஊழியருக்கு 495 ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் திட்டம் இவ்வாரம் யாழ்ப்பாணம் டிப்போவில் ஆரம்பமானது.

கிளிநொச்சி, பருத்தித்துறை இ. போ. ச. டிப்போக்களில் பணிபுரியும் ஊழியருக்கும் இத் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன, (க)

# 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு

(நெல்லியடி)

பருத்தித்துறைத் தொகுதி தேசிய இளைஞர் மன்றத்தின் போக்குவரத்து செலவிற்காக, பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித் துறை எம். பி. திரு. கே, துரைரத்தினத்தால் சிபார்சு செய்யப்பட்டிருக்கும் இந்நிதி; மன்ற அங்கத்தவர்கள் சிரமதானங்களில் கலந்து கொள்ள பொருட்களை எடுத்துச் செல்வதற்காகவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (க)

# "குழந்தைகளை காணிக்கை கொடுங்கள்"

(சாவகச்சேரி)

"மரியாள் தனது திருமகன் கிறிஸ்துவை கோவிலிலே காணிக்கையாகக் கொடுத்த திருநாளை இன்று கொண்டாடுகிறோம். ஞானஸ்நான மென்னும் திருவருட் சாதனத்தைப் பெற்ற குழந்தைகளைப் பெற்றோர்கள் இறைவனுக்கு இன்றே காணிக்கையாக ஒப்புக்கொடுக்க வேண்டும். நமது சிறுர் இறைபக்தியிலும் ஒழுக்கத்திலும் மேம்பட்டவர்களாக விளங்க ஒவ்வொரு பெற்றோரும் கட்டாயமாக முயற்சி செய்யவேண்டும்".

இவ்வாறு தவசிகுளம் காணிக்கைமாதா வருடாந்தத் திருவிழா திருப்பலிப்பூசையின் போது மிருசுவில் பங்குத் தந்தை அருட்திரு ஜே. ஏ. பிரான்சிஸ் அடிகளார் குறிப்பிட்டார்.

இறுதியில்திருச்சொரூபபவனியும், சிறுவர்களுக்கு முதன் நன்மையும் வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திரா காங்கிரஸுக்கு எதிராக
# புதிய கூட்டணி அமைக்க எதிர்க்கட்சிகள் முயற்சி

புதுடில்லி, பெப். 19

இந்திய ஆளும் காங்கிரஸின் நடவடிக்கையால் நாட்டில் ஜனநாயகத்திற்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. எனவே எதிர்க்கட்சிகள் யாவும் ஒன்றிணைந்து இந்திரா காங்கிரஸின் சவாலை எதிர்க்கவேண்டும்.

இவ்வாறு லோக்தள் தலைவரும், முன்னாள் பிரதமருமான திரு. சரண்சிங் தெரிவித்தார்.

### ஜெகஜீவன் கருத்து

ஒன்பது மாநில அரசுகளைக் கலைத்த மத்திய அரசின் நடவடிக்கை எதிர் பாராதது அல்ல. எதிர்க்கட்சிகள் தங்களுக்கிடையேயுள்ள வேற்றுமைகளை மறந்து ஒன்றிணைந்து இந்திரா காங்கிரஸை எதிர்க்க முன்வரவேண்டுமென்று ஜனதாக் கட்சித் தலைவர் திரு. ஜெகஜீவன்ராம் கூறினார். (இ)

---

அச்சுவேலி மர்மமரணம்

# "கிணற்றில் போடப்பட்ட பின்னரே மரண[illegible]ைர்"

(மாவிட்டபுரம்)

அச்சுவேலி விவசாயி மர்ம மரணம்தொடர்பாக கைதான சந்தேக நபர்கள்மீது கொலைக் குற்றச்சாட்டின்பேரில் வழக்குத் தொடரப்படவுள்ளது.

அச்சுவேலியைச் சேர்ந்த சுப்பையா துரைராஜா என்னும் விவசாயி கிணறொன்றில் இறந்துகிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது தொடர்பாக சந்தேகத்தின்பேரில் சின்னட்டி சிவியன், மனைவி சின்னம்மா, முத்தன் வீமு, இராஜதுரை இரத்தினம், சிவலை துரைச்சாமி, கிட்டிணன் துரைசிங்கம், குட்டியன் இராஜதுரை, ஜோசெப் நடராசா ஆகியோர் றிமாண்டில் வைக்கப்பட்டனர். பின்னர் இவர்கள் பிணையில் செல்ல அநுமதிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக பொலிசாரால் தேடப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் சரண்புகுந்த சகோதரரான முத்தன் கார்த்திகேசு என்பவரும் பிணையில் விடப்பட்டிருந்தார்.

இந்நபர்கள் நேற்று மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் யாழ். சட்டவைத்திய அதிபர் திரு. சரவணபவான் வைத்திய அறிக்கையை சமர்ப்பித்தார்.

காலமானவரின் உடலுறுப்புக்கள் கொழும்பு ரசாயனப் பிரிவுக்குஅனுப்பப்பட்டு அதன் அறிக்கை கிடைத்துள்ளதாகக் கூறிய வைத்திய அதிபர் காலமானவர் கிணற்றினுள் போடப்படுவதற்கு முன் இறக்கவில்லையெனவும் மயக்கமடைந்திருக்கலாமெனவும் கிணற்றில் போடப்பட்டபின்னரே மரணம் சம்பவித்திருப்பதாக அறியமுடிகின்றதெனவும் கூறினார்.

நீதிபதி திரு. எஸ்- ஆனந்தக்குமாரசாமி இதனையடுத்து சந்தேக நபர்கள் மீது கொலைக்குற்றச் சாட்டின் பேரில் வழக்குத் தொடருமாறு காங்கேசன்துறைப் பொலிசாருக்கு உத்தரவிட்டு வழக்கை மார்ச் 3ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகள் ஆர். ஜே. செல்வரத்தினம், செல்வி மோகாந்தி செல்வரத்தினம் ஆகியோரும் வழக்காளி தரப்பில் சட்டத்தரணி சு. நடராஜாவும் ஆஜராகினர். (கு)

---

# சட்டத்தரணி கொலைவழக்கு மார்ச் 4 வரை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

சட்டத்தரணி அலோசியஸ் கொலைவழக்கில் சான்றுப் பொருளான ஒரு சோடிசெருப்பையும் சந்தேக நபர்களின் கால் அடையாளங்களையும், அரசாங்க இரசாயன பரிசோதனைக்கு அனுப்புமாறு யாழ். மேலதிக நீதவான் திரு. கே. எஸ். மகேசன் நேற்றுக் கட்டளையிட்டார்.

சந்தேக நபர்களான ராசலிங்கம், ராசா பாஸ்கரன். சருணாகரன் ஆகியோர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். மற்றொரு சந்தேக நபரான பரந்தாமன், கிளிநொச்சிக்கு வேறு ஒரு வழக்கு தொடர்பாக கொண்டுசெல்லப்பட்டுள்ளதாகப்பொலிசார் தெரிவித்தனர்.

இவ்வழக்கு தொடர்பாக வேறு சந்தேக நபர் எவரும் கைதுசெய்யப் படுவதற்கில்லை என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

மேலதி நீதவான் திரு. கே. எஸ். மகேசன், அடுத்ததவணையின் போது மற்ற சந்தேகநபரான பரந்தாமனையும் கோர்ட்டில் ஆஜர் செய்யுமாறு கட்டளையிட்டு, வழக்கை மார்ச் மாதம் 4ம்தேதிக்கு ஒத்திவைத்தார். (க)

---

## தேவை

தமிழ், சைவம், மரவேலை கற்பிக்க ஏ எல் சித்தியடைந்த வசதிக்கட்டணத்தில் நியமனம் பெறும் ஆசிரியர் தேவை. மாசி 23 க்கு முன் விண்ணப்பிக்குக. அதிபர் கரம் பொன் சண்முகநாத ம. வி. ஊர்காவற்றுறை.

5011

---

## சுழல்...

(1-பக்கத் தொடர்ச்சி)

சாமி என்பவரும் எங்களுடன் வந்திருந்தார் எனது முன்னிலையில் சார்ஜன் கந்தசாமி இந்திரராசா விடமிருந்து சுழல் துப்பாக்கியை கைப்பற்றினர்.

"இங்கு சமர்ப்பிக்கப்பட்ட சுழல்துப்பாக்கிகள் தான் அவை. ஒன்று ஜெயேந்திரனிடம் கைப்பற்றப்பட்டது. மற்றது இந்திரராசாவிடம் கைப்பற்றப்பட்டதாகும். இத் துப்பாக்கிகளை 15- 8-79-ல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தினேம். ஆகவே இங்கு சமர்ப்பிக்கப்பட்ட 4 சான்றுப் பொருட்களான துப்பாக்கிகளையும் குண்டுகளையும் அரசாங்க இரசாயன பரிசோதனைக்கு அனுப்பி அறிக்கையை பெறுமாறு கேட்டுக் கொள்கின்றேன்என்றுகூறினர்

நீதவான் சான்றுப் பொருட்களை அரசாங்க ரசாயன பரிசோதனைக்கு அனுப்ப உத்தரவிட்டு இம்மாதம் 25-ம் தேதிக்கு வழக்கை ஒத்திவைத்தார். (க)

---

## இலட்சார்ச்சனை

(சுழிபுரம்)

பொன்னாலை ஸ்ரீ வரதாராஜப் பெருமாள் தேவஸ்தான இலட்சார்ச்சனை இன்றுஆரம்பமாகிப் பத்துத் தினங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

தினமும் பகல் இரவு நேரங்களில் இலட்சார்ச்சனை நடைபெறும். அடுத்த மாதம் 1ம் திகதி காலை சுழிபுரம் திருவடிநிலை தீர்த்தக்கரையில் தீர்த்தம் ஆடுவதற்கு சுவாமி எழுந்தருளும் வைபவமும் நடைபெறும். (கு)

......

## கைதடியில் இன்று

(அரியாலை)

கைதடி செவிப்புலன் கட்புலனிழந்தோர் பாடசாலையின் இருபத்தைந்தாவது வருட ஆரம்பவிழா இன்று புதன்கிழமை காலை கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகிறது. நன்றி தெரிவிக்கும் ஆராதனையுடன் விழா ஆரம்பமாகும்.

ஆராதனையை யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் வணக்கத்துக்குரிய சாம். டி. ஹோர்சிங்டன் அடிகளாரும், அருட்திரு ஐசக் செல்வரத்தினம் அடிகளாரும் நடாத்துவார்கள். ஆராதனையின்பின்னர் எல்லோருக்கும் காலைப்போசனம் வழங்கப்படும் கல்லூரி அதிபர் திரு. டேவிட்விழாவிற்கானஏற்பாடுகளை செய்துள்ளார். (அ)

......

## தற்கொலை

(யாழ்ப்பாணம்)

மனைவியை இழந்து வாழ்ந்த கணவர்' கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் நேற்று நிகழ்ந்தது.

புங்குடுதீவு 4ம் வட்டாரத்தைச் சேர்ந்த எஸ்.சிவலிங்கம் என்பவரே இவ்வாறு கிருமிநாசினி அருந்தி மரணமானவராவார்.

இவரது மரண விசாரணை யாழ். ஆஸ்பத்திரி மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். அமிர்தலிங்கம் முன்னிலையில் நடைபெற்றது.

மரணமானவரின் மனைவி ஏற்கனவே தற்கொலை செய்துகொண்டவரென்றும், சிவலிங்கம் நேற்று முன்தினம் புங்குடுதீவில் வைத்து கிருமிநாசினி அருந்தினரென்றும் உடன்முதலுதவி அளிக்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அனுமதிக்கப்பட்டார் என்றும் பின்னர் நேற்றுக் காலை இறந்துவிட்டதாகவும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

தற்கொலை எனத்தீர்ப்பளிக்கப்பட்டது. ஊர்காவற்றுறை பொலிசார் சாட்சிகளை ஆஜர்செய்தனர். (கொ)

---

## தொழிற்சங்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிராந்திய போக்குவரத்துச் சபையின் சாலை ஒன்றில் கடமையாற்றும் ஊழியர் ஒருவர் முக்கிய தொழிற்சங்கவாதியென்றும், போக்குவரத்துச்சபையில் வேலைபெற்றுத்தருவதாகக்கூறி, ஏமாற்றி பல ஆயிரம் ரூபாவை மோசடி செய்துள்ளார் என்றும், இதன் காரணமாக யாழ்.மாவட்டத்தைச்சேர்ந்த பல இளைஞர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சரின் அந்தரங்க காரியதரிசி என்று குருநாகலைச் சேர்ந்த ஒருவரைத்தமக்கு அறிமுகப்படுத்தி மற்றுமொரு மோசடி புரிந்துள்ளதாகவும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதுகுறித்த மோசடி விஷயத்தை தாம் பாராளுமன்றத்தில் கிளப்பப் போவதாக யாழ், எம். பி. தங்களிடம் உறுதி அளித்திருப்பதாக பாதிக்கப்பட்ட இளைஞர்கள் தெரிவித்தனர்.

---

பட்டிருப்புத் தொகுதியில்

# கிரகணம் பார்த்த ஒருவரின் கண்பார்வை பாதிப்பு!

[மட்டக்களப்பு[

கடந்தசனிக்கிழமை நிகழ்ந்த சூரியகிரகணத்தைப் பார்த்த ஒருவர், கண்பார்வை பாதிக்கப்பட்ட நிலையில் மட்டக்களப்பு அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பட்டிருப்புத் தொகுதியிலுள்ள கோட்டைக்கல்லாற்றிலேயே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

எட்டுப்பிள்ளைகளின் தந்தையான லொறிச்சாரதி ஏ.செல்லத்துரை (38 வயது) என்பவரே கண்பார்வையினுல் பாதிக்கப்பட்டவராவார்.

தான் புகைக்கண்ணாடிமூலம் சூரியகிரகணத்தைப் பார்த்ததாகவும், அதனைப்பார்த்த சில நிமிடங்களில் கண்களில் எரிவு ஏற்பட்டதாகவும், சூரியகிரகணத்தைப்பார்த்த அன்றிரவு 6-30 மணியளவில் கண்ணை ஒரு திரை மறைத்ததாகவும் வைத்திய பரிசோதனையின் போது தெரிவித்தார்.

கண்பார்வை பாதிக்கப்பட்ட மேற்படி நபர் மரணவீட்டிற்குச் சென்றபொழுது, அங்கிருந்த பதினைந்துபேருடன் சேர்ந்து புகைக்கண்ணாடி மூலம் சூரியகிரகணத்தைப் பார்த்ததாகவும், இரண்டரை மணித்தியாலத்தின் பின்னர் அவரின் கண்ணை ஒரு திரை மறைத்ததாகவும் வைத்திய விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

---

பாணின் நிறையை குறைத்தாராம்

# 1000 ரூபா அபராதமும் 4 வார கடூழியமும்!

(யாழ்ப்பாணம்)

நிறை குறைந்த பாணை விற்பனை செய்ததாக குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு 1000 ரூபா அபராதமும். நான்குவார கடூழிய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு, ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில் நீதவான் திரு. ரி. கே. திலகர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

வேலணையைச் சேர்ந்த பேக்கரி உரிமையாளர் சோமசுந்தரம் சிவபாலசிங்கம், 1 றுத்தல் பாணின் விலை 1ரூபா 35 சதமாக இருக்க பன்னிரண்டரை அவுன்ஸ் நிறையுடையபாணை 1 ரூபாவிற்கு விற்றதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இவ்வழக்கை யாழ்ப்பாணம் மாவட்ட விலைக்கட்டுப்பாட்டு பரிசோதகர் திரு, கே. கே மதிவதனன் தாக்கல் செய்திருந்தார். (க)

---

## புதிய தொழிற்சங்கம்

(நெல்லியடி)

பாதணிகள் தயாரிப்போருக்கான தொழிற்சங்கமொன்று வடமராட்சிப் பகுதியில் அங்குரார்ப்பணம்செய்து வைக்கப்பட்டுள்ளது.

வதிரி தமிழ் மன்றமண்டபத்தில் புதிய சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த திரு.எஸ் மாசிலாமணி தலைமையில் இச்சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. (கு)

---

## காட்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிராந்திய முகாமையாளர் திரு. ஓதர் செல்வராஜா தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இறுதி ஆலோசனைக் கூட்டத்தில், ஏராளமான கைத்தொழிலதிபர்கள் கலந்துகொண்டனர். இக்கலந்துரையாடலில் மேற்படி பொருட்காட்சி சம்பந்தமாக கைத்தொழில் அதிபர்களும் ஆலோசனை வழங்கியிருந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டை எம்.பி.திரு. தா.திருநாவுக்கரசு தலைமையில் மேற்படி பொருட்காட்சி தொடர்பாக லயன்ஸ்கழக அங்கத்தவர்கள் கலந்துரையாடினர்.

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக செயலாளர் திரு. க,குணரத்தினம் இது சம்பந்தமாக விடுத்துள்ள வேண்டுகோளில். வட்டுக்கோட்டை பொருட்காட்சியில் காட்சிச்சாலைகளை அமைக்க பல நிறுவனங்கள் ஆர்வத்துடன் முன்வந்துள்ள போதிலும், தங்களது சாலைகள் சம்பந்தமான விபரங்களை வழங்கி அதற்கான இடத்தை அவர்கள் இன்னும் பதிவு செய்து கொள்ளவில்லையென்றும், மேலும் காலம் தாழ்த்தாமல் கைத்தொழில் அதிபர்கள் உடனடியாக தம்முடன் தொடர்பு கொண்டு பொருட்காட்சி இடவசதி சம்பந்தமாகப் பதிவு செய்து கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

---

## கிரிக்கட்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இங்கிலாந்து பத்துவிக்கட்டுகளால் நேற்று வெற்றி பெற்றுள்ளது.

ஸ்கோர் விபரம் இந்தியா 242, 149 இங்கிலாந்து - 296 98 ஓட்டங்கள். (விக்கட்டுகள் நஷ்டமின்றி)

---

## நாகேஷ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் கலந்துகொண்டு ரசிகப் பெருமக்களுக்குசிறப்புநிகழ்ச்சி அளிப்பார்கள். நடிகர்கள் நாகேஷ், ஜெய்சங்கர், அசோகன் ஆகியோர் இங்கு வருவது இதுவே முதல்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

---

## பொலிஸ்...

(1-ம பக்கத் தொடர்ச்சி)

இவ் விசாரணை பற்றி "விபரமான அறிக்கை யொன்றை சமர்ப்பிக்குமாறு நீதவான் பணித்திருந்தார்.

கொழும்பிலிருந்து வந்த விசேட சி. ஐ. டி. குழுத் தலைவர் திரு. டி. எம். கே. டி. புசல்லா, நேற்று அறிக்கையை சமர்ப்பித்தார்.

இந்திரராசா மரணம் தொடர்பாக நடந்த பொலிஸ் விசாரணையில் வாக்குமூலம் பதிவுசெய்யப் பட்டவர்களின் விபரங்கள் இந்த அறிக்கையில் அடங்கியுள்ளது.

இன்னும் பலரின் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்படட விருப்பதாலும், விசாரணை முடியாமலிருப்பதாலும் தவணை வழங்குமாறு சி.ஐ.டி. குழுத்தலைவர் கேட்டுக்கொண்டார்.

இம்மாதம் 25ம் தேதி விசாரணை பற்றிய இறுதியான அறிக்கைசமர்ப்பிக்குமாறு நீதவான் பணித்துள்ளார். (க)

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட்டாருக்காக யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் பெப்ரவரி மாதம் 20 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered ... Sri Lanka under No GH/8948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org